205

தொகுதி 12.] 1933ஹு ஆகஸ்டுமீ [பகுதி 7.

OFFICE OF ... MADRAS
10 OCT 1933

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் போவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14 0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

சென்று அதைப் பிடித்துக் கொண்டுவந்தான். பிறகு அந்த இளைஞனிடம், 'எனதன்புள்ள இளைஞனே நாம் இந்த நிலைமையில் பிரிந்துவிட முடியாது. நான் யார் என்பதை இதோ என்னுடைய கார்டினால் தெரிந்து கொள்ளலாம். என் இருப்பிடம் இந்தத் திக்கில் பத்துமைல் தூரத்தில் இருக்கிறது. நீ இன்னும் எவ்வளவுகாலம் இங்கே இருப்பாய். இப்போது எங்கே தங்கியிருக்கிறாய். நீ தயவுசெய்து எனது இருப்பிடத்துக்கு வந்து விடுவாயா? நான் பல வருஷங்களாகச் சினேகமானவர்களைப் போல் நான் உன்னை வரவேற்பேன்' என்று கூறினான். அதற்கு அந்த இளைஞன், 'நீ இவ்வாறு அன்புடன் விசாரித்ததற்காக உனக்கு வந்தனம். ஆயினும் நான் உன் இஷ்டப்படி செய்ய முடியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். எனினும் நான் மற்றொருமுறை கிருஷ்ணகிரிக்கு வருவேனாயின் அப்போது கட்டாயம் உன் வீட்டுக்கு வருவேன்' என்றான். அப்போது தியாகராஜன் அந்த இளைஞனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, 'நீ இந்த உறுதிமொழி கூறியதற்காகச் சந்தோஷப்படுகிறேன். நீ எப்போதேனும் கிருஷ்ணகிரிக்குவந்தால் கட்டாயம் என் வீட்டுக்கு வரவேண்டும். நீ யார் என்று என்னிடம் இதுவரை சொல்லவில்லையே' என்றதும் அந்த இளைஞன், 'என்னிடம் கார்டு இல்லை. என் பெயர் மோகனசுந்தரம்' என்றான் அப்போது தியாகராஜன், 'அன்பா, இருந்தாலும் என்னிடமிருந்து எதையேனும் பெற்றுக்கொண்டுதான் போகவேண்டும். நான் அவ்வாறு சொல்வதற்காக மன்னித்துக்கொள். உன்னைப் பார்த்தால் நீ ஏதோ கஷ்டப்படுபவன் போலத் தெரிகிறது. உன் வாழ்க்கையில் ஏதேனும் வியாபாரம் முதலியன நடத்த மூலதனமாக வைத்துக் கொள்ள நூறுபவுன் தருகிறேன் வைத்துக்கொள்' என்றான்.

186583
OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1933

இதைக்கேட்ட மோகனசுந்தரத்தின் முகத்தில் சிறிது வெட்கக்குறி காணப்பட்டது. ஏனெனின், தான் ஏழையைப் போல உடையை அணிந்திருந்ததனல் தானே, யாரோ ஒரு புதிய மனிதன் இவ்வாறு சொல்ல, நேரிட்டது என்று நினைத்தான். ஆனல் அப்புதிய சிநேகிதன் உண்மையிலேயே நல்லெண்ணத்துடன் உதவிசெய்ய முன் வந்ததற்காகவும் நன்றி பாராட்டினன். இதற்குள் தியாகராஜனும், 'இவ்வளவு ஏன்? இப்போதே நீ என்னுடன் வந்து என் மாளிகையில் தங்கலாகாதா? நீ மிதுனபுரியில் தங்கியிருந்தாலும் அங்கிருந்து புறப்படும் பஸ்ஸில் ஏறினல் அது நேராக என்வீட்டு முற்புறத்தில் தான் நிற்கிறது. நீ மிதுனபுரியில் தானே தங்கியிருக்கிருய்?" என்று கேட்க, நமது மோகனசுந்தரம, 'ஆம்; நான் தற்காலிகமாக அங்கு தான் தங்கியிருக்கிறேன்' என்றுசொல்லி அதற்கு மேல் ஒன்றும் சொல்ல இஷ்டப்படாமல் நிறுத்திக்கொண்டான். அவன் உண்மையில் என்ன வேலைக்காக எங்கே வந்திருக்கிருன் என்பதைச் சொல்லிக்கொள்ள முடியுமா? ஆகவே அவன் அத்துடன் நிறுத்திக்கொண்டான். இதற்குள் தியாகராஜன், 'நீ இங்கே ஏதேனும் குறிப்பிட்ட வேலையாகச் சுற்றிக்கொண்டிருக்கிருயா? அல்லது வேடிக்கை பார்க்க வந்தாயா? அதோ தெரிகிறதே அந்த அழகிய மாளிகையைக் காண வேண்டுமென்பது உன் உத்தேசமா? நானும் அங்கிருந்து தான் வருகிறேன். அது ஹேமவதி சீமாட்டியின் மாளிகை' என்று மேலும் மேலும் பல கேள்விகளைக் கேட்டான்.

ஹேமவதிசீமாட்டி என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில் மோகனசுந்தரத்துக்கும் பலவித நினைப்புகள் ஏற்படவே சிறிது மனக்குழப்பமடைந்தவனய் ஒன்றும் பதில்சொல்ல நிச்சயிக்கமுடியாமல், 'ஆம்; வேடிக்கையாகச் சிறிதுநேரம் வரை அம்மாளிகையைப் பார்க்கலாமென்றே நினைக்கிறேன்.

நீ உனது ஹாலில்வந்து தங்கும்படி சொன்னதற்காக மிகசந்தோஷம். மற்றப்படி நீ சொன்ன விஷயங்களையெல்லாம்' என்று அவன் ஏதோ சொல்லி முடிப்பதற்குள் தியாகராஜன், 'அவைகளையெல்லாம் நீ மறுத்துவிடுகிறாய் போலும்!' என்று சொல்லிக்கொண்டே மோகனசுந்தரத்தின் முகத்தை உற்று நோக்கி, 'நீ மிதுனபுரியில் தனியாகத்தான் தங்கியிருக்கிறாயோ? உனக்குப் பெற்றோர்கள் இல்லையா? அங்கு உனக்குப் பந்துக்களாவது சிநேகிதர்களாவது இருக்கிறார்களோ?' என்று விசாரித்தான். அதற்கு, மோகனசுந்தரம், 'ஐயா, நான் ஒரு பிரத்யேக வேலையாக வந்திருக்கிறேன். அது நாளைக்குள் முடிந்துவிடலாம் என்றும் நினைக்கிறேன். நீ இவ்வளவு அன்புடன் நடத்தியதற்காக மிக்க வந்தனம். நான் போய் வருகிறேன்' என்றான். அதற்குத் தியாகராஜன், 'அப்படியானால் நான் உனக்கு ஒன்றும் உபகாரம் செய்யாத நிலைமையிலேயே நீ என்னை விட்டுப் பிரிகிறாயா? உன்னைப் பார்த்தால் கண்ணியம் வாய்ந்த இளைஞனைப்போல் காணப்படுகிறாய். நீ மிதுனபுரியில் தங்கியிருக்கும் உன் விலாசத்தையாவது சொல்லிவிட்டுப் போ. நான் உன்னிடமிருந்து பெற்ற உதவிக்குப் பதிலாக ஏதேனும் செய்யச் சாத்தியப்படும்' என்று கேட்டான். அப்போது மோகனசுந்தரம் கேள்விக்கேற்ற பதில் சொல்லாமல், 'நீ இவ்வளவு உபசாரம் செய்வதே போதுமானது அதற்கே நான் உனக்குப் பலமுறை நன்றி செலுத்துகிறேன். நான் உன்னிடத்திலிருந்து ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை. இனி ஏதேனும் சமயம் வாய்க்கும்போது நாம் சந்திப்போம். இப்போது நான் போய் வருகிறேன்' என்றான்.

இவ்வாறு கூறிக்கொண்டே மோகனசுந்தரம், சுந்தர விலாச மாளிகையை நோக்கி நடக்கலானான். தியாகராஜனும்

தனது குதிரைமீது ஏறிக்கொண்டு, 'அந்த இளைஞன் மிக்க யோக்கியனுகவும், அழகுள்ளவனுகவும், பெருந் தன்மை வாய்ந்தவனுகவும் இருக்கிருன். ஆனுல் அவன் யாரென்று தெரியவில்லை. அவனைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் ஆவல் அதிகமாய் இருக்கிறது,' என்று சொல்லிக்கொண்டே மிதுனபுரியின் பக்கமாகத் தன் குதிரையைச் செலுத்தினுன். மோகனசுந்தரமும் சுந்தரவிலாச மாளிகையின் பக்கமாக அதிக தூரம் நடந்து சென்ருன். அப்போது அவன், 'இந்த தியாகராஜன் பரோபகார குணமுள்ளவனுகவும், நல்லவனுகவும் இருக்கிருன். தற்செயலாக அவன் எனக்குச் சிநேகமானதும் கடவுள் கிருபையே என்றுதான் நினைக்கவேண்டும்' என்று சிந்தித்தான். ஆனுல் விரைவில் அவனது எண்ணம் வேறு வகையில் மாறிவிட்டது. அவன் உண்மையிலேயே சுந்தரவிலாச மாளிகையைப் பார்க்க வரவில்லை. அதன் எஜமானியின் குமாரியையல்லவோ பார்க்க வந்தான். அவளை எளிதில் சந்திக்க நேரிடலாம் என்னும் நம்பிக்கையுடன் அவன் அம்மாளிகையை அணுகி எப்படியோ அதைச் சுற்றியிருந்த தோட்டத்தில் நுழைந்துவிட்டான். அவனுடைய அதிர்ஷ்டவசமாக அவன் அத்தோட்டத்தில் நுழைந்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு யௌவன மங்கை தூய வெண்மையான ஆடைகளை அணிந்துகொண்டவளாய் அத்தோட்டத்தில் தன்னந்தனியளாய் வந்து காற்று வாங்கும் உத்தேசத்துடன் மேலும் கீழுமாக உலாவலானுள். அதைக் கண்ட மோகனசுந்தரம் மிக்க சந்தோஷத்துடனும் ஆர்வத்துடனும் அந்த உருவத்தின் அருகில் நெருங்கிச் சென்ருன். முதலில் அம்மங்கை தான் தேடி வந்தவளோ அல்லவோ என்று சந்தேகப்பட்டு அச்சத்துடன் அடிமேல் அடிவைத்து நெருங்கினுன். பிறகு சிறிதுதூரம் சென்றதும் அவள் தன்

மனமார்ந்த காதலியான ராஜேஸ்வரியே என்று தெரிந்து கொண்டானென்றாலும் அவள் எதிரில் போக வெட்கப்பட்டு ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்து நின்று அவளைக் கவனித்தான்.

88-வது அத்தியாயம்.

காதலுக்கேற்பட்ட சோதனை

மோகனசுந்தரம் தனது பழைய காதலியான ராஜேஸ்வரியைக் கண்டதும் ஒரு மரத்தில் மறைவில் நின்றுகொண்டு 'அவள் என்னை இப்போது எப்படி வரவேற்பாளோ தெரியவில்லையே. என்மீது இருந்த ஆசை அப்படியே இருக்கிறதோ அல்லது என்னை அடியோடு மறந்துவிட்டாளோ? எப்படி அவள் எதிரில் போய் நிற்பது? மேலும் இப்படிப் பட்ட ஆபாச உடையில் என்னைக்காண அவள் வெறுப்படைவாளோ?' என்று பலவாறு யோசித்தான். ஆகவே அவன் இன்னதுதான் செய்வதென்ற முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடிக்கொண் டிருக்கையில் அவன் மனதில் உடனே ஒருவித எண்ணம் தோன்றியது. அதாவது அவள் தன்னை மறந்திருக்கவோ அல்லது தன்பால் இருந்த காதலைத் துறந்திருக்கவோ முடியாது என்றும், கேவலம் தான் அணிந்திருந்த உடைக்காக அவள் வெறுத்துவிடுவதாயின் அவளுடைய காதலின் யோக்கியதை எளிதில் தெரிந்துவிடுகிறதென்றும் நினைத்தான். அச்சமயத்தில் ராஜேஸ்வரியும் எங்கேயோ பார்த்துக்கொண்டே அவன் இருக்குமிடத்துக்கு மிகச் சமீபத்தில் வந்துவிட்டாள். ஆகவே அவள் பெயர் எடுத்துக்

கூப்பிடுவது என்று நிச்சயித்தான். அதே சமயத்தில் அவனுடைய வாயினின்றும், 'ராஜேஸ்வரி' என்னும் பெயர் வெளிப்பட்டுவிட்டது உரக்கச் சொல்லலாகாதென்னும் எண்ணத்துடன் அவன் எவ்வளவோ அடக்கிக்கொண்டான். அப்படியும் அச்சொல் அவள் காதில் விழுந்து விட்டது. ஆகவே அவள் திடுக்கிட்டு நின்று யாரோ கூப்பிடுகிறார்களே என்று நினைத்து நாற்பக்கங்களிலும் பார்த்தாள். இதற்குள் அவளுக்கு அத்தொனி முன்பு மிக்க அன்புடனும் ஆவலுடனும் கேட்ட தொனியே என்னும் ஞாபகம் உதிக்கவே அவளது மனத்தில் ஒருவித சந்தோஷம் அவளுக்கும் தெரியாமல் ஏற்பட்டது. அப்போது அவனும் அவள் எதிரில் வந்து நின்றான். ஆகவே ராஜேஸ்வரி மெய்மறந்து அளவிலா புளகாங்கிதமடைந்து அவனைத் தழுவிக்கொண்டாள்.

அவனுடைய முகத்திலும், உதட்டிலும் அளவற்ற முத்தங்களைக் கொடுத்தாள். 'எனதன்புள்ள மோகனம், நீயா வந்துவிட்டாய்? நான் எவ்வளவு சந்தோஷப்படுகிறேன் தெரியுமா?' என்று கூறிக்கொண்டே இன்னும் அதிக ஆர்வத்துடன் அவனைத் தழுவிக்கொண்டு கண் மண் தெரியாமல் அவனது தேகமுழுதும் அன்புகனிந்த முத்தங்களைக் கொடுத்தாள். அப்போது அவன், 'எனதன்புள்ள ராஜேஸ்வரி! என் மனமார்ந்த காதலியே' என்றான். அதற்குமேல் ஒன்றும் பேச அவனால் முடியவில்லை. அளவு கடந்த சந்தோஷத்தில் மூழ்கியிருந்ததால் அவனால் பேச முடியவில்லை. அவள்மீது வீண் சந்தேகங் கொண்டதற்காகச் சிறிது கவலையும் ஏற்பட்டது. அவன் மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் இருக்கவே அவள், 'எனது மனதுக்கு உகந்த காதல! நான் உன்னை நன்றாகப் பார்க்கிறேன். உன் அழகிய முகத்தை நன்றாக உற்றுப் பார்க்கட்டுமா? உன் கண்களின் அழகே அழகு' என்று

பலவாறு வர்ணித்துக்கொண்டே அவள் அவனை இறுகத் தழுவிக்கொண்டு தன் காதல் உருகும் வண்ணம் நடந்து கொண்டாள். அப்போது அவன், ராஜேஸ்வரி தன்னிடம் நடந்துகொள்ளும் வகையில் அதிக திருப்தியடைந்தவனாய் 'அப்படியானால் நீ இன்னமும் என்னை நேசிக்கிறாயா?' என்று புன்முறுவலுடன் தன் வெண்மையான பற்கள் வெளியே தெரியும்படி கேட்டான். அதற்குமேல் அவன் பேசமுடியாத படி அவள் அவனது முகத்தில் அளவற்ற முத்தங்களைக் கொடுத்ததுடன் மார்புறத் தழுவிக்கொண்டே, 'நான் உன்னை நேசிக்கிறேனா என்று கேட்கிறாய்? நான் எவ்வளவு தூரம் உன்னைக் காதலிக்கிறேன் என்பதை வர்ணித்துச் சொல்ல எந்தப் பாஷையிலுமே தக்க சொற்கள் இல்லையென்றே சொல்வேன். நான் உன்னை நேசிக்கிறேன் என்பதை உன் மனமே நம்புவதில்லையா? அப்படியில்லையென்றால் நீ ஏன் என்னைத் தேடிக்கொண்டு இவ்வளவுதூரம் வந்தாய்? காதலா! சிறிதும் சந்தேகப்படவேண்டாம். நான் மனமார உன்னைக் காதலிக்கிறேன் என்பதற்கு இந்த முத்தமே அத்தாட்சி' என்று மேலும் மேலும் பல முத்தங்களைக் கொடுத்தாள்.

அப்போது அவன் தன் காதலி உண்மையிலேயே தன்னை நேசிக்கிறாள் என நினைத்து, 'என தன்பார்ந்த கண்ணே! இப்போது நீ நடந்துகொண்டவகையால் எனது பலவிதமான சந்தேகங்களும் அச்சங்களும் நீங்கின. என் மனம் சந்தோஷப்படுகிறது' என்று கூறியதைக்கேட்ட ராஜேஸ்வரி, 'ஓ, அப்படியானால் நான் உன்னை மறந்துவிட்டிருப்பேனென்று நீ நினைத்தாயோ? நீ ஏன் இதற்குமுன்னமே என்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கக்கூடாது? சரி கிடக்கட்டும். இப்போது நாம் பல விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டியிருப்பதால் ஒரு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டு பேசுவோம் வா. இப்

போது யாரும் இங்கே வரமாட்டார்கள். எத்தகைய பயமும் இன்றித் தாராளமாகப் பேசலாம்,' என்று கூறிக்கொண்டே அவ்விளைஞனை ஒருபுறமாக அழைத்துச் சென்றாள். அக்காதலர்கள் இருவரும் புதர் அடர்ந்த ஓர் இடத்தில் போய் அமர்ந்தனர். ராஜேஸ்வரியும் மிக்க ஆர்வத்துடன் மோகனசுந்தரத்தின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு அவனது முகத்தை உற்றுப் பார்த்தவண்ணம் அதிக குஷாலாகப் பேசினாள். ஆனால் அவனுடைய மிக்க ஏழ்மைத்தனம் வாய்ந்தது போன்ற உடையைக் கண்டு அதிக விசனமும் விசாரமும் அடைந்தவளாய், 'எனதன்புள்ள மோகனம்! நீ சந்தோஷமாக இல்லைபோல் இருக்கிறது. உன்னுடைய நிலைமையில் ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது போலும்' என்று கேட்டாள். அதற்கு அவன், 'அவ்வாறு ஒன்றுமில்லை' என்று சொன்னான். அதற்குமேல் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. தன்னிடம் ராஜேஸ்வரிக்கு அளவுகடந்த அன்பு இருந்தும் இவ்வாறு அவளைச் சோதிக்க வேண்டுமேயென்று அவன் கஷ்டப்பட்டான். அப்போது ராஜேஸ்வரி தன் காதலனான மோகன சுந்தரத்தினிடம், 'மோகனம்' நீ ஏதோ சொல்ல வந்தவன் திடீரென்று வாயை மூடிக்கொண்டு விட்டாயே. நீ ஏதோ கஷ்டத்தில் இருக்கிறாய் என்றும்; உன் மனம் நிம்மதியாக இல்லையென்றும் நன்றாகத் தெரிகிறது. என்னிடம் அதைத் தெரிவித்தால் நான் தக்க பரிகாரம் செய்வேன். உனக்கு ஏதேனும் வேண்டியிருந்தால் முன்னமே எனக்கு எழுதியிருக்கக்கூடாதா? அவசியமானால் எனது எல்லா நகைகளையும் உனக்காகக் கொடுத்துவிடுவேனே. நீ கஷ்டப்படுகிறாய் என்று கேட்க நான் சகிக்கமாட்டேன்' என்று மிக்க பரிவுடன் பேசினாள். அந்த ஆர்வத்தால் அவள்

மறுபடியும் அவனைத் தன் இருகரங்களாலும் மார்புறத் தழுவிக்கொண்டு பல முத்தங்களைத் தந்தாள்.

பிறகு அவனை விட்டுப் பிரிந்து சிறிது தூரத்தில் நின்று அவனே அவள் தொழும் விக்கிரகம் போல் நினைத்து அவனையே ஆசையுடன் உற்றுப்பார்த்தாள். அப்போது மோகன சுந்தரத்தின் மனதில் பலவித எண்ணங்கள் உதித்தன. தான் அப்போது காணப்படுவதுபோல ஏழையல்லவென்றும், தன் பெற்றோர்களும் அகப்பட்டு விட்டார்களென்றும், தான் அவள்மீது வீண்சந்தேகம்கொண்டு சோதனைசெய்ய வந்திருப்பதாகவும் மற்றும் பல உண்மைகளையும் சொல்லிவிடலாமா என்றுநினைத்தான். ஆனால் சோதனை பூர்த்தியாக முடியும்வரை இதை வெளிப்படுத்துவதில்லையென்று தன் பெற்றோர்களிடம் அளித்த வாக்குறுதி அவனது ஞாபகத்துக்கு வந்ததால் தன் உணர்ச்சியை ஒருவாறு அடக்கிக் கொண்டு ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டான். அவன் ஏதோ பலவாறுகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறுனென்பதை அவனது முகக் குறியிலிருந்தே அறிந்துகொண்டுவிட்ட ராஜேஸ்வரி, 'என தன்புள்ள காதல! நீ உன் விஷயங்களையெல்லாம் என்னிடம் சொல். நாம் பரஸ்பரம் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து ஆறுவாரங்களே ஆகின்றன வென்றுலும் ஏதோ ஒரு யுகம்போல் தோன்றுகிறது. ஆனல் இவ்வளவு விரைவில் நாம் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காகச் சந்தோஷம். இனி நீ கஷ்டப்படவேண்டிய அவசிய மில்லை. அன்று என் தாயார் உன்னை நமது மாளிகையினின்றும் துரத்திய போது என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? எப்படியாவது இப்போது நீ திரும்பி என்னிடம் வந்து சேர்ந்தது பற்றி நான் அளவிலா மகிழ்ச்சியடைகிறேன்,' என்று கூறினுள். அப்போது அவன், 'ஆம், நான் ஒரு நம்பிக்கையுடன்

இங்கு வந்து சேர்ந்தேன்' என்று சொல்லிக்கொண்டே அவ் வழகிய பெண்மணியின் முகத்தை உற்று நோக்கினன். அதற்கு அவள், 'ஓ, அந்த நம்பிக்கை என்ன என்று நீ என்னிடம் சொல்ல வேண்டியதில்லை. நானே தெரிந்துகொண்டு விட்டேன். எனக்கும் அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிற தல்லவா? அதாவது நமது காதலை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமென்பது தானே' என்ருள்.

அப்போது அவன், 'கண்மணியே, நான் என் விஷயங்களைச் சொல்கிறேன். சிறிது கவனமாய்க் கேள். நீ என்னை மனமார நேசிக்கிருய் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. உனது இறந்தகால நடத்தையும், இப்போதைய நிகழ்கால நடத்தையும் அதை வலியுறுத்துகின்றது. ஆனல் எதிர்காலமும் ஒன்று இருக்கிறதல்லவா? அந்த எதிர்கால நிலைமையைப்பற்றிப் பேசவே ஆவலுடையவனுக இருக்கிறேன். நான் பரமஏழை என்பதும் திக்கற்றவன் என்பதும் உனக்குத் தெரிந்தவிஷயமே. இப்போதும் நான் அணிந்துள்ள எளிய உடையினின்றுமே என் நிலைமையை அறிந்துகொள்ளலாம். நீயும் இதை அறிந்துகொண்டு என்னிடம் அனுதாபங்காட்டியே பேசியிருக்கிருய் என்பதும் உண்மை. நான் ஏன் முன்னமே உனக்கு எழுதியிருக்கக் கூடாதென்றும் கேட்டாய். இவ்வளவு அன்புடனும் அபிமானத்துடனும் நடந்து கொண்டதற்காக நான் உனக்கு வந்தனம் செலுத்துகிறேன்' என்ருன். உடனே அவள், 'எனக்கு நீ வந்தனம் செலுத்த வேண்டியதில்லை. வந்தனம் என்னும் பேச்சே நம்மிடையில் இருக்கக் கூடாது. நாம்அன்பைப் பற்றியல்லவோ பேசவேண்டும்' என்ருள். அதற்கு அவன், 'ஆம்; நானும் அன்பைப்பற்றித் தான் பேசப்போகிறேன். நான் இப்போது உனக்குத் தெரிவித்தபடி நான் பரம ஏழையாக இருந்தபோதிலும் உன்னிடம் எனக்கு

அளவுகடந்த அன்பு உண்டு எனக்கு இப்போது இருவழிகள் தான் இருக்கின்றன. அதாவது அதிக தூரதேசத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்து அதனால் நான் நல்ல அந்தஸ்தை யடையலாம் அல்லது நீ என்னை விவாகம் செய்துகொண்டால் நான் உயர்ந்த நிலைமையை அடையலாம். ஆகவே உன் வாயிலிருந்து என்னசொல் வரப்போகிறதே அதைப் பொருத்ததாகவே என் நிலைமையும் இருக்கும்' என்றான். இதைக் கேட்டதும் ராஜேஸ்வரி எத்தகைய பதிலையும் அளிக்கவில்லை. அவன் தோள்மீது தன் தலையைச் சாய்த்த வண்ணம் ஒன்றும் பேசாமல் மௌனமாகக் கலவரத்துடன் இருந்தாள் அவள் எல்லையுற்ற ஆச்சர்யத்தை யடைந்தாள். அவள் மோகனசுந்தரத்தைத் தனது காமவிகாரத்தைத் தீர்த்துக் கொள்வதற்குரிய ஆசை நாயகனாக ஏற்றுக் கொண்டாளே யொழிய வேறில்லை என்பதும், கள்ளக் காதலனாக, அவனை வைத்துக் கொண்டு தன் இஷ்டபூர்த்தியை யடைவதற்கு விரும்பினாள் என்பதும் வாசகர்களுக்குத் தெரிந்ததே. அவ்வாறிருக்கையில், தன் மாளிகையிலேயே வேலையில் இருந்த ஒருவனை, அதிலும் பரம ஏழையைக் கணவனாகவே ஏற்றுக் கொண்டு தன் வாழ்க்கையையே அவனுக்கு அர்ப்பணம் செய்துவிடுவதென்றால் அவள் மனம் சம்மதிக்குமா? அப்படிப்பட்ட தியாகத்துக்கு அவள் தயாராக இல்லை. பிரபு குலத்தைச்சேர்ந்த அவள் கேவலம் ஒரு எளிய குடும்பத்தைப் புக்ககமாக ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே அவள் ஒன்றும் பேசமுடியாமல் இருந்தது.

ஆ' அவன் மட்டும் தன்னுடைய உண்மையான நிலைமையை அதாவது மிக்க செல்வர்களான பெற்றோர்கள் அகப்பட்டுவிட்டார்கள் என்னும் சங்கதியைச் சொல்லிவிட்டிருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். அவள்

உடனே 'அப்படியே ஆகட்டும், உன்னையே விவாகம் செய்து கொள்வேன்' என்று சொல்லிவிட்டு அவனைக் கட்டித் தழுவி யிருப்பாள். எனினும் இப்போதும் அவனை இழந்துவிட அவள் தயாராக இல்லை. ஆதலால் முதலில் நினைத்தபடி தியாக ராஜனை மணந்துகொண்டு அவனுக்குத் தெரியாமல் மோகனத் தையும் கள்ளக் காதலனாக ஏற்றுக்கொள்வது என்று தீர்மா னித்தாள். ஆகவே அவள் மெதுவாகத் தன் தலையை உயர்த்தி அவனை உற்று நோக்கியவண்ணம், 'எனதன்புள்ள மோகனம் நான் சொல்லப்போவதைக் கவனமாகக்கேள். நீ சொன்ன எல்லா விஷயங்களையும் கேட்டபின் நான் ஒருவித முடிவுக்கு வந்திருக்கிறேன். அதாவது நீ தூரதேசத்துக்குச் செல்வ தென்பது கூடாது. நீ என்னைவிட்டுப் பிரிவாய் என்னும் சொல்லையும் கேட்க என்மனம் சகியாது. விவாகம் செய்து கொள்வதில் முக்கியமாக ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண் டும். பரம ஏழைகளாக வாழ்வதென்னும் முறையில் விவாகம் செய்துகொள்வதால் என்ன பிரயோசனம்? நான் ஏழ்மைத் தனத்தை ஏற்கவோ அல்லது உன்னை வறுமையில் விடவோ எனக்குச் சம்மதமில்லை. நான் உன்னை மனமார நேசிக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. நீயும் என்னை நேசிக்கி ருய். ஆகவே நாம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது தான். இதற்குள் கவலைப்படவேண்டாம். உன் முகத்தில் கவலைக்குறி இருந்தாலே என்மனம் பதைக்கும். உன் புன்சிரிப்பே எனக்கு ஆனந்தத்தைத் தருவது ஆதலால் முகம் வாட்டமடையாமல் நான் சொல்வதைக்கேள். என்னை விவாகம் செய்துகொள்ள ஒருபிரபு முன் வந்திருக்கிருன் என்று சொன்னதும், அவன் 'ஆ' என்று பெருமூச்செறிந் தான்.

அதைக்கண்ட ராஜேஸ்வரி அவனுடைய காத்தை அவ ளது அதரத்தில் வைத்து அழுத்திய வண்ணம், 'அன்பா'

ஆத்திரமோ கவலேயோ அடையவேண்டாம். நான் சொல்வதை முழுதும்கேள். ஒருபிரபு என்னை விவாகம் செய்து கொள்ள முன் வந்திருக்கிறுன். அவனை நான் உண்மையில் நேசிக்கவில்லே. ஆயினும் இவ்விகலோக இன்பத்தையும் சௌகரியத்தையும் அடையவே நான் அவனே விவாகம் செய்து கொள்வதாக நிச்சயித்திருக்கிறேன். என் அன்பெல்லாம் உன்னிடமே நிலேத்திருக்கிறது. அவனை விவாகம் செய்து கொண்ட பின்னரும் உன்னை மறவேன். இந்த விவாகத்தால் நான் இன்னும் நல்ல அந்தஸ்தையும், அதிக செல்வத்தையும் அடைவேன். அப்போதும் நீதான் என்னுடைய காதற்களஞ்சியமாவாய். உனக்கு ஜீவனத்துக்கோ செல்வத்துக்கோ என்னசெய்வது என்னும் கவலேவேண்டாம். உத்தியோகத்துக்காக இதரநாடுகளுக்குச் செல்லவேண்டியதில்லே. எல்லாச் சௌகரியங்களையும் நான் அளிப்பேன்' என்றுள். அதற்கு அந்த இளேஞன் அதிக வருத்தத்துடன், 'ராஜேஸ்வரி' நீ இப்படியும் உன் கணவனுக்குத் துரோகம் செய்வாயா? மேலும் என்னைப் பிறமாதின் காமத்தைத் தீர்க்கும் கூலி ஆளாக வைத்துக்கொள்ளவா யோசித்திருக்கிறுய், நன்று, நன்று. ஐயோ, இப்படியா,' என்று கூறினுன். அதற்கு அவள், 'மோகனம் நீ பேசுவதைப் பார்த்தால் சத்திய அரிச்சந்திரன் போலத்தோன்றுகிறதே. அவ்வளவு பரிசுத்தமாக வாழமுடியுமா?' என்று கூறிக்கொண்டே அவனது முகத்தை உற்று நோக்கினுள்.

அப்போது அவன், 'ராஜேஸ்வரி, இப்படியெல்லாம் பேசவேண்டாம்; எனதன்புள்ள ராஜேஸ்வரியா இப்படிப்பேசுவது என் அன்பைச் சோதிக்கிறுயா? என்ன, நான் உனக்குக் கணவனைத்தகுந்த உண்மைக்காதலனு என்று பரீட்சை செய்கிறுயா' என்றுகேட்க அவள், 'எனதன்புள்ள நேசா! நீசொல்

வது ஒன்றும் விளங்கவில்லையே நான் உண்மையைத்தானே பேசிக் கொண்டிருக்கிறேன்; என்றாள். அதற்கு அவன், 'என்கண்மணியே! என்முகத்தைப்பார்த்துப்பேசு. இன்னமும் நீ உன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லையா? வேறு ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு என்னைக் கள்ளக் காதலனாக வைத்துக்கொள்வது என்று தான் தீர்மானித்திருக்கிறாயோ? எனக்கு நீ மனைவியாக இறைவன்முன் அமைந்துவிட்டதை நீ மறந்து விட்டாயோ? இப்போது நீ என்னை விட்டு வேறு ஒருவனுக்கு விவாகம் செய்து கொள்வது நீதியோ? அவனை விவாகம் செய்தபின்னர் நீ என்னை அணைய விரும்பி னும் நான் ஒரு பரிசுத்தகன்னிகையை அணைந்ததாக எனக்கு ஏற்படுமா?' என்று பரிந்து கேட்டான். அதனால் அதிக கோபமும் ஆச்சர்யமும் அடைந்த அவள், 'மோகனம்! நான் உன்னை நேசித்து உனக்கு இடங்கொடுத்ததால் நீ உன் நிலை மையைத் துஷ்பிரயோகஞ் செய்கிறாய். நான் எனது பலஹீ னம் காரணமாக உன்னை நேசிக்கிறேன் என்பதைக்கொண்டே நீ என்னைக் கண்டித்துப் பிரசங்கம் செய்வதா ? எனக்கு மட் டும் உன்னிடம் இவ்வளவு அதிகமான அன்பு இல்லாமல் இருந்தால் இதைப் பொறுத்திருக்க மாட்டேன். நானும் அந்தஸ்திலிருந்து நமது இன்பத்துக்கும் தடையில்லாதபடி இருந்தால் அதை நீ ஏன் தடுக்கவேண்டும். ஆகவே என் யோசனையில் உனக்குத் திருப்தி ஏற்பட்டிருப்பதாகச் சொன் னால் இதுவரையில் நீ என்னைக் கண்டித்ததற்கும் நான் உன்னை மன்னித்துவிடுகிறேன். வருத்தப்படாமல் இப்போது நான் கொடுக்கும் சில பவுன்களைப் பெற்றுக்கொள்' என்று கூறிக் கொண்டே அவள் தனது மணிபர்ஸை எடுத்தாள்.

அப்போது மோகனசுந்தரம், அதிக ஆத்திரத்துடன் தன் இடத்திலிருந்து எழுந்து ராஜேஸ்வரியின் கையிலிருந்த

மணிபர்ஸை வீசி எறிந்து மிக்க கோபாவேசத்துடன், 'இனி நமக்குள் எவ்வித சம்பந்தமும் வேண்டியதில்லே. உன்னை நான் சோதித்துப் பார்த்ததில் உன் உண்மைக்குணம் வெளிப்பட்டு விட்டது. உன்னைச் சோதிக்கும்படியான புத்தி எனக்குக் கொடுத்ததற்காக இறைவனுக்கு வணக்கம் செலுத்துகிறேன். நீ ஒரு அழகிய விஷப்பாம்புபோல் இருக்கிறாய். 'துர்ச்சனருக்கு அங்க முழுதும் விடமேயாம்' என்பதுபோல் உன் தேகம் முழுதும் விஷமாகவே இருக்கிறது. இதோ நான் போய்விடுகிறேன். இனி உன்ஞாபகம் எனக்கு வராது. நான் கடைசி முறையாக உன்னிடம் அனுமதி பெறுகிறேன்' என்று கூறிவிட்டு அவன் திரும்பியும் பாராமல் ஓரே ஓட்டமாக விரைந்து சென்றான். இதைக்கண்ட ராஜேஸ்வரி மிக்க துக்கத்துடன், 'எனதன்புள்ள மோகனம்' ஓடாதே. இங்கே வா. நான் உனக்குத் தக்க சமாதானம் சொல்கிறேன்', என்று கத்தினாள். ஆயினும் அவன் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் போய்விட்டான். சொற்ப நேரத்துக்கெல்லாம் அவன் ராஜேஸ்வரியின் பார்வையினின்றும் மறைந்தான்.

ஏதோ ஒன்றைக்கண்டு பயந்து ஓடுபவன்போல் அவன் பின்பக்கமும் திரும்பிப்பாராமல் ஓடிய அவன் சொற்பதூரம் சென்றபின்னர் அங்கிருந்த ஒரு பாலத்தின்மீது உட்கார்ந்து கொண்டு சிறிது நேரத்திற்கு முன்பு நடந்த சம்பவத்துக்காக அதிக துக்கமடைந்து அதைத் தாங்க முடியாமல் முகத்தில் கையை மூடிக்கொண்டு ஓவென்று அழுதான். சிறிது நேரம் அழுத பின்னர்தான் அவனுக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. தன்னை அவ்வளவுதூரம் காதலிப்பதாகச் சொன்ன அவள் இப்படியும் தன்னை ஒரு காமியாக நினைத்துவிட்டாளே என்று நினைத்து வருத்தப்பட்டான். ஒரு காலத்தில் மிக்க ஆர்வத்துடன் பார்த்த அந்த மாதின் முகத்தைப் பார்ப்ப

தென்றல் இனி ஒரு விஷப்பாம்பைப் பார்ப்பதுபோல் இருக்குமேயென்று நினைத்தான். இனி அவளையோ அவளைப்போன்றவர்களையோ நம்புவதில் பயனில்லையென்னும் படிப்பினையை உணர்ந்தான். அன்பு என்னும் உயரிய குணத்தினிடமே அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அன்பு என்பதே வெறும் வேஷந்தானோ என்று நினைத்தான். ஆனால் உத்தமர்களிடம் உண்மை அன்பு இருக்குமென்றும், காமத்தில் சிறந்தவர்களுக்கு அன்பேது என்றும் உணர்ந்தான்.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே, காதலில் ஏமாற்றமடைந்த மோகன சுந்தரம் அப்பாலத்தின் மீது அரைமணி நேரம்வரை உட்கார்ந்திருந்த பின்னர் கடிகாரத்தைப் பார்த்ததில் மணி ஆறு அடித்தது. அந்த மாலை நேரம் மிக ரம்மியமானதாய் இருந்தும் அவனுக்கு அது இன்பத்தைத் தரவில்லை. அவன் சிறிதுநேரம் அழுத பின்னர் ஒருவாறு ஆறுதலடைந்தானென்றாலும் அவனது மனம் பரிபூரணமான சாந்தியைப் பெற்றிருக்கவில்லை. அவன் அதிருப்தியுடனும் நிம்மதியில்லாமலும், விசாரமுடையவனாகவு மிருந்தான். ஆகவே அங்கிருந்து எழுந்து அவன் நடந்து சென்றான். ஆனால் எந்தத் திக்கில் எங்கே நடக்கிறோமென்பதே அவனுக்குத் தெரியவில்லை. ஏதோ ஆத்திரத்தால் அவன் மிக விரைவாக நடந்து சென்றானே யொழிய தான் போகவேண்டிய வழியில் தான் நடக்கிறானா என்பதைப் பற்றி அவன் கவனிக்கவே யில்லை. இவ்வாறு சொற்பநேரம் நடந்த பின்னர் சுமார் ஏழுமணிக்கு அவன் தான் எங்கே இருக்கிறான் என்பதைக் கவனித்தபோது சுந்தரவிலாச மாளிகையினின்றும் அதிகதூரம் வந்துவிட்டதை உணர்ந்தான். ஆனால் மிதுனபுரியை நெருங்கவில்லை. வேறு வழியில் நடந்து விட்டான். வீடுகளே இல்

லாத பரந்த நிலப்பரப்பில் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. தன்னுடன் இரத்தினபுரியிலிருந்து வந்த ஆள் மிதுன புரியில் தன்னை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்திருப்பானே என்று நினைத்தான். பிறகு சமீபத்தில் தென்பட்ட ஒரு குடிசைக்குப் போவதென நினைத்து அதை நோக்கி நடந்து செல்கையில் பின்வருமாறு சிந்தித்தான்:—

"அடடா, என்ன முட்டாள்தனம், நான் ஏன் இவ்வாறு விசனப்பட வேண்டும். இப்படி துக்கப்படுவதற்குப் பதிலாக என் தந்தையாரின் உபதேசப்படி ராஜேஸ்வரியைச் சோதித்துப் பார்த்து உண்மையை அறிந்துகொண்டு விட்டதற்காகச் சந்தோஷமடைய வேண்டுமல்லவா ? நான் பெரிய பணக்காரனுடைய மகன் என்றும், எனது பெற்றோர்கள் இன்னாரென்றும் சொல்லிவிட்டிருந்தால் அவள் என்னை மணந்துகொள்ளச் சம்மதித்திருக்கலாம். ஆ; என்ன சம்பந்தம்; உண்மையான அன்புக்காக விவாகமில்லாமல் ஏதோ அந்தஸ்துக்காக விவாகம் செய்வது! என்ன உலகம். நான் ராஜேஸ்வரியை நம்பி என் அன்பு முழுதையும் அவளிடம் செலுத்தியிருந்தாலும் நான் கடைசியில் ஏமாற வேண்டியதுதானே. இருந்தாலும் அழகும் யௌவனமும் நிறைந்த ராஜேஸ்வரியின் உருவத்தை என் மனக் கண்ணினின்றும் அப்புறப்படுத்துவதென்பதும் முடியாத காரியமாகவே இருக்கிறது" இவ்வாறாகச் சிந்தனை செய்துகொண்டே அவன் அந்தக் குடிசையை அடைந்தான். அங்கு விவசாயி ஒருவன் தனது மனைவியுடனும் மக்களுடனும் மாலை ஆகாரம் சாப்பிட உட்கார்ந்திருந்தான். மோகன சுந்தரம் அவர்களை ஒரு கோப்பை பால் இருந்தால் கொடுத்து உதவும்படி கேட்டான். அவர்க

ளும் உடனே அதைக் கொடுத்தார்கள். அப் பாலுக்காகப் பணத்தை அவன் அம்மாதினிடம் கொடுக்காமல் ஒரு அரை ரூபாயை மூத்த குழந்தையிடம் கொடுத்து ஏதேனும் விளையாட்டுச் சாமான் வாங்கிக்கொள்ளும்படி சொன்னான். பிறகு அவன் அங்கிருந்து மிதுனபுரி எவ்வளவு தூரம் இருக்கும் என்று விசாரித்தான். மிதுனபுரி எட்டு மைல் தூரத்திலிருப்பதாகவும், கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தர விலாச மாளிகை வேறு திக்கில் ஏழுமைல் தூரத்தில் இருப்பதாகவும் கூறினார்கள். பிறகு அங்கிருந்து மிதுனபுரிக்குச் செல்ல ஏதேனும் வண்டி அகப்படுமா என்று அவன் கேட்டுக் கொண்டிருந்த போது தெருவில் யாரோ ஒரு கனவான் குதிரைமீது வந்து நின்றான். அவனைக் கண்டதும் அக் குடிசைக்குச் சொந்தக்காரனான விவசாயி, 'ஓ, தியாகராஜப் பிரபு வந்திருக்கிறார். அவருக்கு என்ன வேண்டுமோ தெரியவில்லை' என்று கூறிக் கொண்டே தெருவுக்கு ஓடினான்.

தியாகராஜன் விவசாயி இடம் தனக்கு அதிக தாகமாக இருப்பதால் அருந்துவதற்கு ஏதேனும் கொடுக்கும்படி கேட்டான். முதலில் மோகன சுந்தரம் தியாகராஜனது கண்ணுக்குத் தெரியாதபடி மறைய வேண்டுமென்று நினைத்தான். ஏனெனின், அவன் மீண்டும் பல கேள்விகளையும் கேட்பான். அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும். அல்லது அவன் தன் மாளிகைக்கு வரும்படி அழைப்பான். அதற்கு ஏதேனும் சமாதானம் சொல்ல வேண்டும். அவனைப் பார்க்காம லிருந்து விடுவதே நலமென நினைத்தான். ஆயினும் தியாகராஜன் எப்படியோ மோகன சுந்தரத்தைப் பார்த்து விட்டான். எனவே அவன் இன்னின்ன லட்சணங்களோடு கூடிய வாலிபன் குடிசையில் இல்லையா என்று விவசாயியைக் கேட்க, அவனும் இருப்பதாக ஒப்புக் கொண்டான். ஆதலால் தியாகராஜன்

குதிரையை விட்டு இறங்கிக் குடிசையில் சென்று மோகனத்தின் கையைப் பிடித்துக் கொண்டு 'அன்ப! இப்போது நீ என்னிடம் பக்குவமாக அகப்பட்டுக் கொண்டு விட்டாய். இனி தப்பித்துச் செல்ல முடியாது. உனக்கு வழி தவறிவிட்டதால் மிதுனபுரிக்குச்செல்ல வண்டி வேண்டுமென்று கேட்கிறாய். எனது மாளிகைக்கு வந்து என்னுடன் ஆகாரமருந்தினால் நான் உனக்கு நல்ல வண்டியைக் கொடுத்து அனுப்புவேன். எனது மாளிகை இங்கிருந்து இரண்டுமைல் தூரத்தில் தான் இருக்கிறது. உன்னால் அவ்வளவு தூரம் கூட நடக்க முடியாதென்றால் நான் வீட்டுக்குப் போய் உனக்காக என் வண்டியை அனுப்புகிறேன். உடனே உன் சம்மதியைத் தெரிவி. இதற்கு நீ மறுக்கலாகாது' என்று ஆர்வத்துடன் கேட்டான். அதற்கு மோகனம், 'நண்பா! நீ இவ்வளவு ஆர்வத்துடன் கூப்பிடும்போது அதை எப்படி மறுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் மிதுனபுரியிலுள்ள எனது ஆள் எனக்காக விசாரத்துடன் காத்திருப்பானே' என்று சமாதானமாய்க் கூறினான்.

மோகனசுந்தரம் 'என்னுடைய ஆள்' என்று சொன்னதைக் கேட்ட தியாகராஜன், இவ்வளவு எளிய உடையுடனும் வறுமையுடனும் இருக்கும் ஒருவனுக்கு ஆள் கூடவா என்று நினைத்து ஆச்சர்யமடைந்தானென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், 'நண்பா! நாம் எனது மாளிகைக்குப் போய்ச் சேர்ந்ததும், எனது வண்டியை மிதுனபுரிக்கு அனுப்பி உன் ஆளை அழைத்து வரும்படி சொல்வோம். அதற்காக நீ கவலைப்படவேண்டாம்' என்று கூறினான். அவ்வேளையில் அக் குடிசையை நோக்கி ஒரு வண்டி வேகமாக வந்தது. அதில் தியாகராஜனுடைய மாளிகை யொன்றில் குடியிருக்கும் கனவான் வந்து கொண்டிருந்ததால், மோக

னம் அதில் ஏறிக்கொண்டு தன் மாளிகைக்கு வரலாம் எனத் தியாகராஜன் யோசனை கூறினன். மோகனமும் அதிக களைப் படைந்திருந்தபடியால் அதை மறுக்க முடியவில்லை. மேலும் தியாகராஜன் அதிக நல்லவனுகவும், தாராள நோக்க முடையவனுகவும் இருப்பதால் அப்படிப்பட்ட ஒருவனுடைய சிநேகம் ஏற்கத் தக்கதே யென்று நினைத்தாலும் அவனுடைய இஷ்டப்படியே நடப்பதாக ஒப்புக்கொண்டான். ஆகவே தியாகராஜன் வெளியில் இருந்து வந்த வண்டியை நிறுத்தச் சொல்லி அதில் மோகன சுந்தரத்தை ஏறிக் கொள்ளும்படி செய்தான். பிறகு அவன் தன் குதிரைமீது ஏறிக்கொண்டான். எல்லாருமாகச் சேர்ந்து விவசாயிக்கும் அவனது மனைவிக்கும் வந்தனம் செலுத்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

தியாகராஜன் குதிரையின்மீது சென்றதால் சிறிது முன்பாகப் போய்ச் சேர்ந்தான். வண்டியும் பின்னுலேயே வந்து விட்டது. மோகனத்தைத் தியாகராஜன் தனது மாளிகையில் மிக்க அன்புடன் வரவேற்ருன். அவனை ஒரு அழகான அறையிலிருந்த உயரிய ஆசனத்தில் அமர்த்திவிட்டு, 'நண்பா! மிதுனபுரியில் உன் ஆள் எங்கே இருக்கிருன் என்பதைச் சொல். நான் அவனை அழைத்து வருவதற்காக எனது வண்டியை அனுப்புகிறேன். பிறகு நாம் இருவரும் சாப்பிடுவோம் தெய்வச் செயலாக இரண்டாவது முறை நான் உன்னை விவசாயியின் வீட்டில் சந்திக்க நேர்ந்ததற்காகச் சந்தோஷப் படுகிறேன்,' என்ருன். பிறகு மோகனமும் தான் மிதுனபுரியில் இறங்கி யிருக்கும் ஓட்டலின் விலாசத்தையும் அவனது ஆளின் பெயரையும் சொன்னதுடன் ஆள் வரும்போது ஓட்டல் கணக்கைத் தீர்த்துவிட்டு வரவேண்டு மாதலால் தொகையைக் கொடுப்பதற்காக உள் சட்டையிலிருந்த மணி பர்ஸை

எடுத்தான். அப்போது அப் பையில் மறைவாக இருந்த விலை யுயர்ந்த தங்கக் கடிகாரமும் புலப்பட்டது. அவ்வளவு விலை யுள்ள கடிகாரமும் அதிக தொகையுள்ள மணி பர்ஸை யும் அவனிடம் கண்ட தியாகராஜன் அதிக ஆச்சரிய மடைந் தான்.

186583.

உடனே வண்டியும் மிதுனபுரிக்குப் புறப்பட்டது. அவர் கள் இருவரும் ஆகாரத்துக்கு உட்கார்ந்தார்கள். ஆகாரம் புஷ்டியானதாகவும் விலையுயர்ந்ததாகவும் இருந்தது. முத லில் அவர்கள் ஏதோ சாதாரணமான பொது விஷயங்களைப் பற்றியே பேசிக்கொண் டிருந்தார்கள். வேலைக்காரர்கள் எல் லாவற்றையும் பூர்த்தியாகப் பரிமாறிய பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றதும் மோகனசுந்தரம் தன்னுடைய உண்மை விஷயத்தைத் தன் புதிய நண்பனிடம் தெரியப் படுத்திவிட இதுதான் தக்க சமயமென யோசித்து நினைத்தான். ஆகவே அவன் பேச ஆரம்பித்து, 'நண்பா' நீ எனக்கு இவ்வளவு உப சாரம் செய்வதற்காக நான் உனக்கு நன்றி செலுத்த விரும்பு கிறேன். நான் இவ்வளவு எளிய உடைகளை அணிந்துகொண்டு வறுமையில் மூழ்கியுள்ளவன் போலக் காணப்பட்டாலும் என்னிடம் தக்கபணமும், விலையுயர்ந்த கடிகாரமும் இருப்பது கண்டு நீ ஆச்சர்யப்படலாம்' என்று கேட்டதற்குத் தியாக ராஜன், 'அன்பனே உன் விஷயங்களில் அநாவசியமாகத் தலையிட நான் விரும்பவில்லை. நீயாக இஷ்டப்பட்டு எதையே னும் சொன்னால் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். நீ உன் னுடைய அந்தஸ்தைத் தெரியப்படுத்துவதற்காக அதையெல் லாம் தெரிவிக்க வேண்டுமென்பது அவசியமில்லை. உனது பாவனையே உன் உண்மை நிலைமையை அறிவிக்கின்றது. எனக்கு உன் விஷயத்தில் ஏதோ ஒருவிதமான அபிமானம் ஏற்பட்டுவிட்டது' என்று கூறினான். அப்போது மோகன

மும், 'ஆம்; அதற்காகத்தான் நானும என் விஷயத்தைப் பற்றி உன்னிடம் சொல்லிக்கொள்ள வேண்டுமென்னும் அவா புடையவனுக இருக்கிறேன். ஆதலால் அவ்வாறு சொல்லிக் கொள்ள அனுமதி கொடுப்பாயாக. நான் சொல்லப் போகும் கதையில் பலவிசேஷ சம்பவங்களெல்லாம் சேர்ந்திருப்பதால் அது கேட்கவும் மிக்க ருசிகாமாய் இருக்கும்' என்றான்.

அதற்குத் தியாகராஜன், 'சரி அப்படியானல் நீ அதைச் சொல். ஆயினும் நீ உற்சாக முடையவனுகக் காணப்பட வில்லை யாதலால் ஒரு டம்ளர் ஒயினை அருந்து. அப்போது தான் உற்சாகம் அதிகப்படும். நீ ஏதோ காதல் சம்பந்தமான விஷயத்தைச் சொல்லப் போகிருய் என்று நினைக்கிறேன். அது எனக்கும் இன்பத்தைத் தரும். ஏனென்றால் நானும் சமீபத்தில்தான் எனது உயிரையே அழகிற்சிறந்த ஒரு யௌவன மாதினிடம் ஒப்படைத்துவிட்டேன்' என்றதும் காதல் சம்பந்தமாக ஏமாற்ற மடைந்துள்ள மோகன சுந்தரத்திற்கு அதிக வருத்தம் ஏற்பட்டது. காதல் நிகழ்ச்சிக ளெல்லாம் ஒன்றன் பின் ஒன்ருக ஞாபகத்துக்கு வந்தன. மனங் குழைந்து வருந்தினன், எனினும் தன் விஷயத்தை அப்புதிய நண்பனிடம் தெரிவிக்க வேண்டுமென்னும் ஆவலுடன், 'ஆம்; என் விஷயத்தை நீ கண்டு பிடித்தது சரிதான். நான் எங்கு யாரை நேசித்திருக்கக் கூடாதோ அப்படிப்பட்ட ஒரு நங்கையை நேசித்தேன். நான் தக்க கல்வியும் வளர்ப்பும் உடையவனு யிருந்தும் என் நிலைமை காரணமாக நான் ஓரிடத்தில் சேவகனுக இருக்கவேண்டி யிருந்தது. அப்போது உண்மையிலேயே என் பெற்றோர்கள் யார், எனது வரலாறு என்ன, என்பனவெல்லாம்தெரியாமல் இருந்ததால் திக்கற்ற முறையில் நான் கேவலம் ஒரு சீமாட்டியின் வீட்டில் சேவக னுகவே இருக்க வேண்டிய தாயிற்று. ஆனல் எனக்கு அப்

போது என் தகப்பனுர் யார் என்பது தெரியாமலிருந்தாலும் என் தாயார் மட்டும் ஏதோ பிரபு குலத்தைச் சேர்ந்த ஒரு சீமாட்டியாகவே இருக்க வேண்டுமென்னும் நம்பிக்கை மட்டும் எனக்கு இருந்து வந்தது. அப்போது நான் அழகிற் சிறந்த ரூபலாவண்ய முடைய ஒரு பெண்ணினிடம் காதல் கொண்டேன். அவள் பெயரையோ அல்லது குறிப்பாக வேனும் அவள் யார் என்பதையோ இப்போது சொல்ல முடியாது. அவளும் என்னை மனமார நேசிப்பதை நான் கண்டேன். நான் அவளை அளவுகடந்து காதலித்தேன். அவளது அழகிய உருவமே சதா என் மனக்கண் முன் தோன்றிக் கொண்டிருந்தது. என் உயிரையே அவளுக்காகத் தியாகமும் செய்திருப்பேன். அவளும் என்னை ஆழ்ந்து நேசிக்கிறுள் என்பதற்கு அடையாளமாக என் இஷ்டத்தையே பூர்த்தி செய்து கொள்ளவும் அவள் இடம் கொடுத்துவிட்டாள். நாங்கள் இருவரும் ரகசியமாகக் கூடிக் குலாவி இன்ப வாழ்க்கையையும் அனுபவித்து வந்தோம்' என்று கூறியதும் திடீரென்று அவனது பேச்சை நிறுத்தினுன்.

தியாகராஜன் ஹேமவதி சீமாட்டியின் சுந்தர விலாச மாளிகையினின்றும் வந்ததாகச் சிலமணி நேரங்களுக்கு முன் அவனுக்கு விபத்து நேர்ந்தபோது கூறவில்லையா? ஆகவே சீமாட்டியும் அவளது குமாரி ராஜேஸ்வரியும் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தான் சீமாட்டியின் மாளிகையில் சேவகனுக இருந்ததாகப் பின்னுல் தெரிந்து கொண்டால் உடனே அவன் ராஜேஸ்வரியைப் பற்றியே தான் இவ்வளவும் கூறியது என்று எளிதில் அறிந்துகொண்டு விடுவானே என்ற அச்சம் அவனுக்குத் தோன்றியது. ஆகவே பேச்சைத் திடீரென்று நிறுத்தினுன். மறுபடியும் யோசித்துப் பார்த்ததில் தான் பேசுவதிலிருந்து ராஜேஸ்வரியைக் குறிப்

பிடுவதாகத் தெரிந்துகொள்ள முடியாதாகையால் அதை எளிதில் அறிவது சாத்தியமில்லையென்று நினைத்து மேலும் பேசத் தொடங்கி, 'அப்பெண்மணி என் இஷ்டப்படி நடந்து கொண்டு அன்பை ருஜூப் படுத்தியதால் அதை உண்மை யான அன்பே என்று நிச்சயமுடன் இருந்தேன் பிறகு நிலைமையில் மாறுதல் ஏற்பட்டு நான் வேலை செய்துகொண் டிருந்த இடத்தை விட்டுப் போகவேண்டியதாக நேர்ந்தது. அதனால் நான் மனமாரக் காதலித்த என் அருங்கண்மணியை விட்டுப் பிரிய வேண்டியதாயிற்று. ஆயினும் போன இடத் தில் எனது பெற்றோர்கள் யார் என்னும் உண்மை வெளி யாயிற்று. என் தாயார் ஒரு சீமாட்டி என்பதையும், என் தந்தையும் ஒரு பெரிய பிரபு என்பதையும் தெரிந்து கொண் டேன். அதனால் என் நிலைமையிலேயே 'மாறுதல்' ஏற்பட் டது. எனது தாயும் தந்தையும்கூடப் பல வருஷகாலம்வரை பிரிந்திருந்து பிறகு கூடினார்கள். அவர்கள் இப்போது தான் விவாகம் செய்து கொண்டார்கள். நான் பிறக்கும்போது அவர்கள் பரஸ்பரம் கள்ளக் காதலர்களாக இருந்தார்களே யொழிய சட்ட பூர்வமான தம்பதிகளாக இருக்கவில்லை. எனது தந்தை மிகப் பெரிய செல்வந்தராய் இருப்பதால் நான் எத்தொழிலையேனும் செய்வதாயினும் அவர் அதற்கு வேண் டிய உதவியை யெல்லாம் செய்வார். அவருக்கு என் காதல் சங்கதியும் தெரிந்து விட்டது. அவர் அதைக் கேட்டுக் கோ பங் கொள்ளவில்லை. ஆனால் அவர் அப் பெண்மணியின் காத லைச் சோதிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அவள் இருக்கு மிடத்துக்கு நான் மிக்க ஏழைபோன்ற கோலத் துடன் சென்று நான் ஏழ்மையுடன் இருப்பதால் உத்தியோ கத்துக்காக வேறு தேசம் போய் விடுவதாகவும், இன்றேல் அவள் கலியாணம்செய்துகொண்டு என் அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்றும் கூற வேண்டுமென்றும், அவள் ஏழையா

கிய என்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதித்தால் வருஷவாரி இரண்டாயிரம் பவுன் தருவதாக ஒப்புக் கொண்டார். அந்தப் பெண் தற்காலிகமாக மிதுனபுரியில் ஒரு பந்துவின் வீட்டுக்கு வந்திருப்பதால் அவளைக் காணவே இவ்விடம் வந்துள்ளேன்' என்று கூறினன்.

மோகனசுந்தரம் தான் பேசுவது ராஜேஸ்வரியைப் பற்றியே என்று தியாகராஜனுக்குத் தெரியக் கூடாதென்னும் எண்ணத்துடன் கடைசி பாகத்தைத் திரித்துக் கூறினன் என்பதை வாசகர்கள் உணர்ந்திருக்கலாம். அவன் மேலும் சொல்லத் தொடங்கி, 'நான் மிதுனபுரிக்கு வந்ததும் இவ்வாறு ஏழையைப்போல் வேடம் அணிந்துகொண்டு அப்பெண்ணைப் போய்ப் பார்த்தேன். என் தந்தை கூறிய யோசனைப்படி நடந்து கொண்டேன். தியாகராஜனும்; நீ நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, அவள் என்னை விவாகம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள். அவள் ஒரு பெரியபணக்காரனைக் கலியாணம் செய்துகொள்ளப் போவதாகவும் நான் இறுதிவரை அவளது கள்ளக் காதலனுகவே இருந்து வர வேண்டுமென்றும், எனக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் அளிப்பதாகவும் கூறினுள். அதை நான் வெறுக்கிறேன். ஆகவே அவளுடைய யோசனையைப் புறக்கணித்து விட்டேன். ஆத்திரம் தாங்கமாட்டாமல் அவளிடம் மறு வார்த்தையும் பேசாமல் வந்து விட்டேன். எங்கே போவது என்ன செய்வது என்று தெரியாமலும் தவித்து நின்றேன்,' என்று கூறினன். அதற்குத் தியாகராஜன், 'ஓ, அந்த நிலைமையிலா நான் உன்னைச் சந்தித்தேன்! உன் மனம் இவ்வாறு புண்பட்டிருந்தும் நீ எனக்கு உதவி செய்ய முன் வந்ததைக் காண நான் சந்தோஷப்படுகிறேன். நானும் உன்னை ஏழையென்றே நினைத்து ஏதேனும் சன்மானம்செய்வதாகக் கூறிய

தற்கு என்னை மன்னிக்கவும்' என்றான். அதற்கு மோகனம், 'உன்னை நான் மன்னிப்பதாவது, அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம். என்னை ஏழையென நினைத்தாலும் என்னை அலட்சியம் செய்து விடாமல் சமத்துவத்துடன் ஏற்றுக் கொண்டு எல்லாவகையான உதவிகளையும் செய்வதாக உறுதி கூறினையே. உன்னை மறக்க முடியுமா? என் தந்தைக்குச் சிற்றப்பன் மகன் ஒருவன் இங்கு இருப்பதாகவும் தெரிந்தது. ஆனல் அவசியத்தை யொட்டிச் சொற்பகாலம் எங்கள் நிலைமையை இரகசியமாகவே வைத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. நான் ஊருக்குப் போன பின்னர் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். என் தந்தையும் உனக்குக் கடிதம் எழுதுவார். நீ இரத்தினபுரிக்கு வரும்போது உன்னை விருந்தினராக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பார்' என்றான்.

அதற்குத் தியாகராஜன், 'நான் எப்போதாவது இரத்தினபுரிக்கு வரும்போது, கிருஷ்ணகிரியில் ஆச்சர்யமான சந்தர்ப்பத்தில் சிநேகிதனை உன்னைச் சந்தித்துப் பேசும் பாக்கியம் கிடைப்பதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனக்குக் கலியாணமானதும் நான் எனது மனைவியுடன் இரத்தினபுரிக்கு வருவேன். நான் காதலிக்கிற பெண்மணியோ நீ கூறுவது போன்ற பெண்மணி அல்ல. என் காதலி என்னை மனமார நேசிக்கிறாள். எனக்காக உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறாள். என் காதலியை வளர்த்த தாயாரோ மிக்க உறுதியும் கண்டிப்புமான மனப் பான்மையுடையவள். என் காதலியும் மிக்க ரூபலாவண்ய முள்ளவளே. ஆ! உன் காதலியைப் பற்றி நீ கூறியது மிக்க அவமானகரமானதாகும். நீ அவள் கையினின்றும் தப்பியது மிகச் சரியானதே. அதற்காக நீ விசனப்படாமல் திருப்தியுடனும் நிம்மதியுடனுமே இருக்க வேண்டும்' என்றான். இதைக் கேட்ட

மோகனம் துக்கத்தாலும் வருத்தத்தாலும் பெருமூச்சு எறிந்தான். ராஜேஸ்வரியின் உருவம் அவனது அகக் கண்ணை விட்டு அப்புறப் படுவதென்பது எளிய காரியமாய்த் தோன்றவில்லை. இதற்குள் மிதுனபுரிக்குச் சென்ற ஆள் திரும்பி வந்து விட்டான். அவனுடன் மோகனத்தின் ஆளும் வந்திருந்தான். ஆகவே அவர்களுடைய சம்பாஷணை அப்போது நிறுத்தப்பட்டது.

அப்போது தியாகராஜன், 'நண்பா! உன்னை இவ்வளவு எளிதில் அனுப்பிவிட முடியாது. நீ இன்னும் இரண்டு மூன்று நாட்களாவது இங்கே இருக்க வேண்டும். நீ மிதுன புரியிலுள்ளவளும் உன்னை ஏமாற்றியவளுமான அப் பெண்மணியின் வீட்டுக்குப் போகவேண்டாம். நான் உனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து தருகிறேன். நாளைய மாலை எனது சினேகிதர்களான பாக்கியம் தம்பதிகள் வீட்டில் விருந்து நடக்கப் போகிறது. நீயும் வந்தால் இந்நகரிலுள்ள பிரபல கனவான்களை அவர்களுடைய குடும்பத்துடன் பார்த்து அறிமுகம் செய்து கொள்ளலாம். கேவலம் அப் பெண்ணையே நினைத்துக் கவலைப்படாமல் வேறு பல இன்பகரமான விஷயங்களில் கவனம் செலுத்துவாயானல் அவளை எளிதில் மறந்து விடலாம்' என்று யோசனை கூறினன். மோகனமும் அளவு கடந்து மதுபானம் அருந்தியபடியாலும் தியாகராஜன் உற்சாக வார்த்தைகளைக் கூறியதாலும் அவனும் ஒருவாறு கவலையை மறந்து மன நிம்மதியடைந்தான். மேலும் ராஜேஸ்வரியை விட்டுப் பிரியும்போது அவன் ஏழையென்றும், திக்கற்றவனென்றும் அவள் நினைக்கும்படியான நிலைமையில்தானே அவன் வந்தான். ஆதலால் அங்கேயே இருந்து மறுநாள் விருந்துக்குப் போனல் அங்கு ராஜேஸ்வரியும் வருவாளாயின் தன் உண்மை நிலையை அறிந்து தான்

செய்த குற்றத்துக்காக வருந்துவாளல்லவா என்று நினைத்தான். அவளுக்குப் பாடம் கற்பிப்பதற்காக அவ்வாறே செய்வதென்றும் எண்ணினான். மேலும் தான் அவளுடன் பேசாமலும், அவளைப் பற்றி வெளியில் ஒன்றும் கூறாமலும் இருந்தாலும் அவளே தன்னை மிக்க விலையுயர்ந்த ஆடைகளுடனும், தியாகராஜனுடனும் இருப்பதைப் பார்ப்பாளல்லவா என்றும், தியாகராஜனும் தன்னை அவளுக்கு அறிமுகம் செய்துவைப்பானதலால் அப்போது அவள் கஷ்டப்படட்டும் என்றும் நினைத்தான். தான் ராஜேஸ்வரியின் மாளிகையில் வேலைக்கு இருந்தபோது இருந்த நிலைமையில் இப்போது இல்லாததால் அவன் சிறிது பெருமையடைந்தான். உலக அனுபவம் அவ்வளவாக இல்லாத வாலிபர்களுக்கு இத்தகைய அகங்காரம் ஏற்படுவது இயற்கையே. ஆகவே அவன் இரண்டொரு நாட்கள் அங்கேயே தங்கி யிருப்பதாகவும், விருந்துக்கும் வருவதாகவும் ஒப்புக் கொண்டான். பிறகு மோகனத்துக்குப் படுக்கை தயார் செய்து அதில் படுத்து உறங்கும்படி சொல்லிவிட்டுத் தியாகராஜன் போய் விட்டான்.

89-வது அத்தியாயம்.

விருந்து மண்டபம்.

மோகனசுந்தரம் அன்று அதிகதூரம் நடந்து களைப்படைந் திருந்ததாலும், மனமாரக் காதலித்த ஒருபெண் ஏமாற்றிவிட்டதால் அடைந்த கவலையாலும் அவன் படுக்கையில் தன் தலையை வைத்ததும் அவனுக்கும் தெரியாமலே

தூக்கம் வந்து விட்டது. மறுநாள் காலை அவன் எழுந்திருக்கும்போது மணி பத்து ஆகிவிட்டது. அவன் விழித்ததும் சேவகனை அழைக்கும் மணி யடித்ததில் அவனுடைய ஆள் வந்து சேர்ந்தான். அப்போது மோகனம் தன் ஆடைகளை மாற்றிக்கொண்டான். பிறகு அவனுக்கு முன் நாள் நடந்த சம்பவங்களும், அவன் செய்த முடிவுகளும் அவனது ஞாபகத்துக்கு வந்தன. தான் செய்த முடிவைப்பற்றிச் சந்தோஷப்பட்டான். ஆயினும் அப்போது அவனுக்கு ஒருவித அச்சமும் உண்டாயிற்று. அதாவது அந்த விருந்துக்கு ஹேமவதி சீமாட்டியும் வந்து, அவன், ரஸ்தாவில் வழிமடக்கிக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரியின் சகோதரன் என்று சொல்லி இழிவுபடுத்திவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சினான். ஆயினும் தான் தியாகராஜனைப் போன்ற ஒரு பெரிய பிரபுவினுடன் இருக்கும்போது அவள் அவ்வளவு தைரியமாக இவ்வாறெல்லாம் செய்வது சாத்தியமா என்று யோசித்து அவ்வாறு செய்ய மாட்டாளென்றும் கருதினான். ஆகவே எப்படியாயினும் அந்தவிருந்துக்குச் செல்வதென்றே முடிவு செய்தான்.

பிறகு அவன் காலை ஆகாரம் அருந்துவதற்காக அதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள அறைக்குச் சென்றான். அங்கு தியாகராஜனும் தயாராகக் காத்திருந்து அவனை வரவேற்றான், புஷ்டியானதும் விலை யுயர்ந்ததுமான ஆகாரம் மேஜைமீது வைக்கப்பட்டிருந்ததை இருவரும் உட்கொண்டார்கள். அப்போது தியாகராஜன் மோகனத்தினிடப், 'நண்பா! நீ திருப்தியாகக் காலங் கழிக்கும்படி செய்ய என்ன செய்யலாம் யென்று யோசித்துக்கொண் டிருக்கிறேன். என் நண்பர்கள் யாரிடமேனும் அழைத்துச் சென்று அறிமுகம் செய்துவைக்கலாமா என்று யோசிக்கிறேன். ஆயினும் நாளையதினம் நீ

விருந்தில் பலரைச் சந்திக்கப் போவதால் அங்கு யாருடைய சினேகம் செய்துகொள்ள நீ விரும்புகிருயோ அவர்களுடன் அறிமுகம் செய்து வைக்கலாமென்று இருக்கிறேன். எதற்கும் நான் தினசரி, எனக்கு மனைவியாகப்போகிற பெண் மணியின் வீட்டுக்குப்போவது வழக்கமாயினும் இன்று வாச் சௌகரியமில்லையென்று எழுதி அனுப்பி விடுகிறேன்' என்று சொன்னபோது அவன், 'ஆ, அது கூடாது எனக்காக நீ தினசரி சந்திக்கிற உன் காதலியைச் சந்திக்காமல் இருக்க வேண்டாம். நான் தனியாகவே உன் தோட்டங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்து வருகிறேன்' என்றதற்கு அவன் 'இல்லை. அவ்வாறு நீ தனியே இருக்க நான் விடமாட்டேன். அது கிடக்கட்டும். நீ நேற்று சுந்தர விலாச மாளிகையைக் காணச் சென்றுயே. அங்கு போய் எல்லாம் பார்த்தாயா? அதில் அப்படி யொன்றும் விசேஷமில்லையே,' என்று கேட்டான். தனது காதலி என்று தான் நினைத்த ஒரு மாளிகையின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அவன் மனத்தில் ஒரு விதமான உணர்ச்சி தோன்றிய தென்றுலும் அவன் அதை அடக்கிக்கொண்டு, 'ஆம்; நான் அக் கட்டடத்தின் அருகில் போனேன். ஆனால் பண்டைய முறையிலுள்ள கட்டடங்களை யெல்லாம் பார்க்க வேண்டுமென்னும் ஆவல் எனக்குக் கிடையாது. ஆதலின் உள்ளே நுழைய முயற்சியும் செய்யாமல் திரும்பிவிட்டேன். அதைவிட எனக்கு நல்ல இயற்கை வனப்பு வாய்ந்த மைதானத்தில் குதிரைசவாரி செய்வதிலோ அல்லது கால் நடையாகவே நடந்து சுற்றிப் பார்ப்பதிலோ ஆவல் அதிகம்' என்ருன்.

அதைக் கேட்ட தியாகராஜன், 'நண்பா! நடப்பதைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. நேற்றெல்லாம் நடந்திருக்கிருய் ஆகையால் இன்று குதிரை சவாரி செய்வோம்.

அதி வேகமாகப் போகக்கூடிய குதிரையோ அல்லது அடக்க மாகவுள்ள குதிரையோ எது வேண்டுமாயினும் தருகிறேன். நீ குதிரை சவாரிசெய்வதில் தக்கபயிற்சி யுள்ளவன்போலும்' என்றான். அதற்கு மோகனம், 'வீண் பெருமை பேசிக் கொள்வதில் என்ன பிரயோசனம். எனக்கு அவ்வளவாகப் பயிற்சி கிடையாது. ஆதலால் சாதாரண அடக்கமுள்ள குதிரையைக் கொடுத்தாலே போதும்' என்றான். பிறகு அவர்கள் ஆகாரத்தை முடித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டுச் குதிரை லாயம் சென்றனர். தியாகராஜன் பலவிதமான குதிரைகளை வளர்த்து வந்தான். அவனுக்குக் குதிரை வளர்ப்பில் ஆசையும் ஆற்றலும் அதிகம். மோகன சுந்தரம், அக் குதிரை லாயத்திலிருந்த குதிரைகளின் வனப்பைக் கண்டு ஆச்சர்யமடைந்தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு குதிரைமீது ஏறிக் கொண்டனர். தோட்டத்துக்கு வெளியே மைதானத்தில் சவாரி செய்யச் சென்றனர். தியாகராஜனுக்குச்சொந்தமான நிலப் பிரதேசமே மிகப் பெரிதாக இருந்தது. அதையெல்லாம் சுற்றி வந்தனர். வெகு தூரத்துக்கு அப்பால் சென்றதும் அங்கு விவசாயியின் வீடு ஒன்று தென்பட்டது. அங்கு சென்று தாகசாந்தி செய்து கொள்வதென்று தீர்மானித்தனர். அப்படியே அவ் வீட்டுக்குச் சென்றதில் அக் குடியானவனும் தியாகராஜனுக்குத் தெரிந்தவனாக இருந்தபடியால் மரியாதையுடன் இருவரையும் வரவேற்றுத் தாகசாந்தி செய்வித்தான்.

பிறகு அவர்கள் இருவரும் குதிரைமீது ஏறிக்கொண்டு வேறு வழியாகத் தியாகராஜன் மாளிகையைநோக்கி வந்தார்கள். வழியிலுள்ள பற்பல கட்டடங்களையும், இதர இயற்கை அழகுகளையும் கண்டு மோகனசுந்தரம் மனங் களித்தான். சுமார் மாலை நான்கு மணிக்கு அவர்கள் மாளிகையை யடைந்

தார்கள். அதுமுதல் ஆறுமணி வரை அம்மாளிகையிலேயே இருந்த புஸ்தகசாலே, விசித்திர பொம்மைகள் படங்கள் முதலியவற்றைப் பார்ப்பதில் காலங்கழித்தனர். சரியாக ஆறு மணிக்கு மாலே ஆகாரம் அளிக்கப்பட்டது. பிறகு அவர்கள் இருவரும் தங்கள் அறைக்குச் சென்று வேறு ஆடைகளே அணிந்தனர். இரவு பாக்கியம் குடும்பத்தில் நடக்கப்போகும் விருந்துக்குச் செல்லவே அவ்வாறு ஆடையணியப்பட்டதால் மோகனசுந்தரம் தனது அறையில் ஆடையை மாற்றிய போதே விலேயுயர்ந்ததும், மிக்க அழகைத் தரக்கூடியதுமான ஆடையையே அணிந்தான். அதனுல் அங்கு வரப்போகும் ராஜேஸ்வரியை மயக்கிச் சரிப்படுத்தி அவளே விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவன் இருந்ததாகச் சொல்ல முடியாது. ஆனுல் அவள் எதிரில் தான் ஆடம்பரத்துடனும் பெருமையுடனும் இருக்கவேண்டு மென்பதே அவனது ஆவல். ஆகவே தக்கபடி தன்னே அலங்கரித்துக்கொண்டபின் அவன் தியாகராஜனுடைய அறைக்குச் சென்ருன். தியாகராஜனும் தன் நண்பனே விருந்தில் பலருக்கும் அறிமுகம் செய்து வைக்கவேண்டுமென்னும் ஆவலுடன் இருந்ததால் அவன் தக்கபடி ஆடைகளே அணிந்து கொண்டு வந்ததைக்கண்டு சந்தோஷமடைந்தான்.

இரண்டு குதிரைகள் பூட்டிய பழையகால வண்டியொன்று மாளிகைக்கு வெளியில் தயாராகக் காத்துக்கொண்டிருந்தது. அது தியாகராஜனுடைய பாட்டன் காலம் முதல் அனுபவத்தில் இருந்து வருகிறது. அதில் தியாகராஜனும் மோகன சுந்தரமும் ஏறிக்கொண்டார்கள். அவர்கள் விருந்துக்காகப் போகவேண்டிய இடம் அங்கிருந்து ஏழு மைல் தூரத்தில் இருந்தது. பாக்கியம் தம்பதிகளின் மாளிகையோ

மிகப் பெரியது. அக்குடும்பமோ எல்லாராலும் பண்டைப் பெருமையும் மிக்க செல்வமும் வாய்ந்ததென்று போற்றப் படுவதொன்ருகும். அத்தம்பதிகளில் ஆடவனுக்கோ யாரேனும், அவரிடமிருந்து வாங்கிக் குடிக்கும் மதுபானச் சரக்கு மிக்க உயர்ந்ததென்று சொல்லி விட்டால் போதும் அவரை அவர் நேசிப்பார். அதுபோலவே அவருடைய மனைவியோ தன்னுல் பரிமாறப்படும் உணவை யார்சிலாக்கியமாகச்சொல்கிருர்களோ அவர்களை நண்பாராகக் கொள்வார். அத்தம்பதிகளுக்குப் பல மக்கள் உண்டு. எல்லாருக்கும் கலியாணமாகி அவரவரும் ஏதோ ஒருவிதமான தொழிலில் பற்பல இடங்களிலும் இருக்கிருர்கள். அன்று விருந்துக்கு எல்லாரும் வந்திருந்தார்கள். தியாகராஜனுடையவண்டி அங்குவந்து சேர்ந்த போது விருந்தினரில் பலரும் அம் மாளிகைக்கு வந்துவிட்டிருந்தார்கள். சுமார் முந்நூறு பேர் ஆடவரும் மாதருமாக அவ்விடம் கூடியிருந்தார்கள். அவர்கள் தான் அப்பிரதேசத்திலுள்ள சீமான்களும் சீமாட்டிகளுமாவர்.

தியாகராஜனும் மோகனமும் கை கோர்த்துக் கொண்டு மாடிமீது ஏறி வந்தார்கள். மாடியில் முதலில் இருந்த பெரிய அறையில் பாக்கியம் தம்பதிகள் காத்திருந்து வந்த விருந்தினர்களை யெல்லாம் கை குலுக்கி வரவேற்றனர். அவ்வறையைக் கடந்து சென்றதும் அங்கிருந்த ஹாலில் முன்னடியாகவே வந்திருந்த சீமான்களும் சீமாட்டிகளும் கூடியிருந்தனர் அவர்களில் ராஜேஸ்வரி இருக்கிருளா என்று மோகனசுந்தரம் முதலில் கவனித்தான். அவள் காணப்படவில்லை. இதற்குள் தியாகராஜன் மோகனத்தை அம்மாளிகையின் சொந்தக்காரர்களாகிய பாக்கியம் தம்பதிகளிடம் அறிமுகம் செய்து வைத்தான் அவர்களும் அவனை மிக்க மரியாதையுடன் வா

வேற்றுபசரித்தனர். அந்தஹால் மிக்க அழகானதாயும், மின் சார விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பற்பல வித மான ஆசனங்களை யுடையதாயும் இருந்தது. தியாகராஜன் அங்கிருந்த பல அன்பர்களைப் பார்த்துப் புன்சிரிப்பு சிரித்துக் கொண்டே அந்த ஹாலைச் சுற்றிவந்தான். அவனும் தன்னு டைய காதலியும், சமீபத்தில் தன்னை விவாகம் செய்துகொள் ளப் போகிறவளுமான ராஜேஸ்வரி வந்திருக்கிறாளா என்று ஆவலுடன் பார்த்தான். மோகனசுந்தரமும், தன்னால் காத லிக்கப்பட்டவளும், தன்னை ஏமாற்றிவிட்டவளுமான ராஜேஸ் வரி வந்திருக்கிறாளா என்று கவனித்தான். அவர்கள் இரு வரும் தேடியது ஒருத்தியையே யென்றாலும் அதை அவர்க ளில் ஒருவனும் அறியமாட்டான். அவள் அங்கு தென்படா மற் போகவே அவர்கள் இருவரும் கடைசியில் இருந்த ஆச னத்தில் அமர்ந்தார்கள். அவர்கள் உட்கார்ந்தது தான் தாம தம் உடனே ஒரு சேவகன் அவர்களுக்கு காபியைக் கொண்டுவந்து வைத்தான்.

தியாகராஜன் நினைத்தபடியே அங்கிருந்த எல்லாரும் ரூபலாவண்யமும், யௌவனமும், கம்பீரமும் வாய்ந்த இளை ஞனை மோகனத்தையே உற்றுப்பார்த்து அவன் யாரா யிருக்கலாம் என்று பரஸ்பரம் விசாரித்துக் கொண்டனர். பல ஆடவர்கள் தியாகராஜன் அருகில் சென்று அவனது கை யைக் குலுக்கினார்கள். அப்போது தியாகராஜன் அவர்களுக் கெல்லாம் தன் நண்பனாகிய மோகனத்தையும் அறிமுகம் செய்துவைத்து அவனுடைய கையையும் குலுக்கும்படி செய் தான். இதற்குள் பாக்கியம்தம்பதிகளில் ஆடவன் தியாகராஜ னிடம் வந்து, 'நீ யாரையோ உன்னுடன் அழைத்துக் கொண்டு வந்துவிட்டாய். அவன் யாரென்று விசாரிப்பதிலும் அவனைப் பார்த்து மகிழ்வதிலுமே எல்லாரும் கவனமாக

இருக்கிறார்களே யொழிய விருந்தில்கூட அவர்களுக்கு அவ் வளவாகக் கவனமில்லை. இங்குள்ள மாதர்கள் பலர் அவன் யாரென்று என் மனைவியைக் கேட்கிறார்களாம்' என்றார் அதற்குத் தியாகராஜன். 'ஐயா, அவன் இரத்தினபுரியைச் சேர்ந்த பிரபுகுலத்தில் உதித்தவன். அவன் மிக்க செல்வந்த னே. அவனுக்குக் கலியாணம் ஆகும்போது வருஷவாரி இரண்டாயிரம்பவுன் வருமானமுள்ள மூலதனமும் அவனுக்கு அளிக்கப்படும் என்று அவன் விஷயத்தில் அதிக சிரத்தை யுள்ள பெண்களிடம் வேண்டுமாயினும் தெரிவியுங்கள்' என்று சிரித்துக்கொண்டே வேடிக்கையாகக் கூறினான். அப்போது அவர், 'வாஸ்தவத்திலேயே அவ்விளைஞன் மிக்க ரம்யமான தோற்றத்தை யுடையவனாகவே இருக்கிறான். அவன் இன் னும் சொற்பகாலம் நமது கிருஷ்ணகிரியில் தங்கியிருப்பானா?' என்று விசாரிக்கவே தியாகராஜன், 'அவன் இங்கு அதிக மாகத் தங்கமாட்டான். ஆயினும் நான் அவனை என் மாளி கையில் எவ்வளவு அதிககாலம் வைத்துக்கொண்டிருக்க முடி யுமோ அவ்வளவு காலமும் வைத்திருப்பதென்று நினைத்தி ருக்கிறேன். ஆயினும் அவன்மட்டும் இரத்தினபுரிக்குச் செல் வதில் மிக்க ஆர்வமுடையவனாக இருக்கிறான்' என்று தெரி வித்தான்.

பிறகு அவர் சம்பாஷணையை வேறு விதமாகத் திருப்பி, 'தியாகராஜா! நீ இப்பால் அடிக்கடி சுந்தரவிலாச மாளிகைக் குச் செல்வதாகவும், சொந்தக்காரியான ஹேமவதி சீமாட்டி யின் குமாரி ராஜேஸ்வரியிடம் நீ காதல் கொண்டிருப்பதாக வும், அவளையே நீ விரைவில் விவாகம் செய்துகொள்ளப் போவதாகவும் ஊரெல்லாம் ஒரே பேச்சாக இருக்கிறதே. அது மெய்தானா? மேலும் ஹேமவதி சீமாட்டியும். இத்தனை கால மாக விதவையாய் இருந்தும் இப்போது மனோபாவத்தை

மாற்றிக் கொண்டுவிட்டதாகவும், சந்திரசேகரம் பிரபு விரை வில் அவளிட இன்பத்தைப் பெறும் பாக்கியம் பெறுவா னென்றும் வதந்தி பரவியிருக்கிறது. இதன் மர்மமெல்லாம் உனக்குத்தான் தெரிந்திருக்கவேண்டும்' என்று கேட்டார். அப்போது தியாகராஜன் சிரித்துக்கொண்டே, 'இதில் இரக சியமென்ன இருக்கிறது. இப்போது நீர் சொன்னதெல்லாம் உண்மைதான். ஆனல் நான் ராஜேஸ்வரியைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன் என்று இங்கிருக்கும் எல்லா ரிடமும் தெரிவித்து விடவேண்டாம். அவளை விவாகம் செய்து கொள்வதென்னும் முடிவுக்கு நேற்றுதான் வந்தோம் உம்மைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. எப்படியிருந்தா லும் காரியம் முடியும்போது எல்லாருக்கும் தெரியத்தான் போகிறது. ஆனல் இப்போதே பலரும் தெரிந்து கொண்டு என்னை அதைப்பற்றியே விசாரிப்பதென்றால் அது எனக்குப் பிடிக்காது' என்றான். அதற்கு அவர், 'தியாகராஜா' அப் படியே ஆகட்டும். உன் இரகசியத்தை நான் யாரிடமும் சொல்லமாட்டேன். எனினும் இந்த ஹாலில் கூடப் பலர் அதைப் பற்றிப் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நான் போய், உன் புதிய நண்பன் நடிப்பதாய் இருந்தால் அவனுக் கேற்ற மங்கையைக் கண்டுபிடிக்க வேண்டும்' என்றார். அவர் அதைச் சொல்லி முடித்ததும் அவ் வைபவத்துக்கென்றே ஸ்பெஷலாகத் தருவிக்கப்பட்டிருந்த பாண்டு வாத்தியம் முழங்கத் தொடங்கிற்று. ஹாலில் கூடி யிருந்தவர்கள் மற் றொரு பெரிய மண்டபத்துக்குச் சென்றார்கள். அங்குதான் ஆடவர்களும் மாதர்களும் நடனம்செய்தல் வேண்டும். இதற் குள் அவ் வீட்டுக்காரர் முதலில் எல்லாரையும் வரவேற்ற அறைக்குச் சென்றார். அப்போதுதான் ஹேமவதி சீமாட்டி யும், அவளது குமாரி ராஜேஸ்வரியும் அங்கு வந்து சேர்ந் தார்கள். அவர்கள் இருவரையும் பாக்கியம் தம்பதிகள் மிக்க

மரியாதையுடனும் அன்புடனும் வரவேற்றனர். அம் மாளிகையின் சொந்தக்காரி, ஹேமவதி சீமாட்டியைப் பார்த்து, 'உன்னுடன் சந்திரசேகரம்பிரபு ஏன் வரவில்லை' என்று கேட்டாள். அதற்கு ஹேமவதி சீமாட்டி, 'அவன் இன்று மாலை வெளியில் உலாவப்போனதில் பனியில் நீண்டநேரம் இருந்துவிட்டதால் சீதளத்தால் கஷ்டப்படுகிறான். இன்று இங்குவர முடியாமைக்காக அவனும் வருந்துவதுடன் தன் வருத்தத்தை உங்களிடம் அறிவிக்கும்படி சொன்னான். நாங்கள் வந்ததே மிகக் காலதாமதமென்று தெரிகிறதே. கூட்டம் பெரிதாக இருப்பதுபோலத் தோன்றுகிறது' என்று உபசாரம் பேசினாள்.

அதற்கு சொந்தக்கார மாது, 'ஆம், விருந்தினர் அதிகமாகத்தான் இருக்கின்றனர்' என்று சொல்லிவிட்டு உடனே ராஜேஸ்வரியின் பக்கமாகத் திரும்பி, 'பெண்மணியே', உன்னுடன் இன்று நடிப்பதற்கு நான் ஒரு தக்க பேர்வழியைச் சிபார்சு செய்வதை நீ மறுக்கமாட்டாய் என்று நம்புகிறேன். அழகிற் சிறந்த ஒரு வாலிபன் தியாகராஜனுடன் இங்கு வந்திருக்கிறான். எல்லாரும் அவனையே கவனிக்கும்படியாக அவன் அவ்வளவு வசீகரத் தோற்ற முடையவனாக இருக்கிறான். நான் அவனை உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்' என்றாள். அவள் குறிப்பிட்ட ஆள் யார் என்று தெரியாததால் ராஜேஸ்வரியும் புன் சிரிப்புடன், 'அப்படியே ஆகட்டும்; அவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்த ஆள் யார்?' என்று ஆவலுடன் கேட்டாள். அதற்கு அவள், 'அவனது பெயர் மோகனசுந்தரம். அதோ அந்த அறையின் கோடியில் சில பிரபுக்களுடன் பேசிக்கொண்டு நிற்கிறான் பார். ஆ! என்ன அழகான வாலிபன்!' என்றாள். மோகனம் என்னும் சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் ஹேமவதி சீமாட்டியின்

முகம் வெளுத்தது, ராஜேஸ்வரியின்முகம் வெட்கத்தால் நிலை கலங்கியது. ஆனால் பாக்கியம் தம்பதிகள் அதைக் கவனிக்க வில்லை. ஹேமவதி சீமாட்டியும், ராஜேஸ்வரியும் திரும்பிப் பார்த்ததில் உண்மையிலேயே மோகனசுந்தரம் பிறவி முதலே பிரபுக்கள் வீட்டில் வளர்ந்தவன்போல் உயரிய நடை யுடை பாவனையுடன் இதர பிரபுக்கள் சிலரோடு பேசிக்கொண்டிருந் தான். அங்கு எத்தனையோ பிரபுக்களான வாலிபர்கள் கூடி யிருந்தும் அழகிலோ, ரூபலா வண்யத்திலோ மோகன சுந்த ரத்துக்கு இணையானவர்கள் இல்லையென்று துணிந்து கூற லாம்.

மோகனசுந்தரம் அதற்கு முன்னாள் சுந்தரவிலாச மாளி கைக்கு வந்ததும், ராஜேஸ்வரிக்கும் அவனுக்கும் நடந்த தக ராறுகளும் ஒன்றுமே ஹேமவதி சீமாட்டிக்குத் தெரியாது. அவ்வளவேன்? மோகன சுந்தரம் கிருஷ்ணகிரிக்கு வந்திருக் கிறான் என்பதே அவளுக்கு அதுவரை தெரியாது, மேலும் சில தினங்களாக அச் சீமாட்டி அவனைப்பற்றி நினைத்தது மில்லை. ஆதலின் இப்போது திடீரென்று அவனது பெயரைக் கேட்டதும் அவளுக்கு முன்பு தன் குமாரிக்கும் அவனுக்கும் இடையே நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந் தன. ஆகவே, மோகன சுந்தரம் அங்கு பெரிய பிரபுவைப் போல் ஆடம்பரமாக வீற்றிருந்ததையும், அதுவும் ராஜேஸ் வரிக்குக் கணவனாகப்போகிற தியாகராஜனே அவனை அங்கு அழைத்து வந்தானென்பதையும் அறிந்ததும் அவள் திக்பிர மையுடன் திடுக்கிட்டாள். தாயைப்போலவே ராஜேஸ்வரியும், 'இது என்ன ஆச்சரியமாய் இருக்கிறது? முதல் நாள் மிக்க எளிய உடைகளுடன் பரம தரித்திரனைப்போல் என் முன் னிலையில் தோன்றிய மோகனசுந்தரம் இன்று இவ்வளவு விலை யுயர்ந்த ஆடை ஆபரணங்களை அடைந்ததெப்படி? மேலும்

என்னை விவாகம் செய்து கொள்ளப் போகும் தியாகராஜனுடன் இவன் சினேகமானதெப்படி? மோகன சுந்தரம் தியாகராஜனிடம் என் இரகசியங்களையும் யோக்கியதைகளையும் சொல்லிவிட்டிருந்தால் என்ன செய்வது? என்னை அவமானப் படுத்துவதற்காகவே இருவருமாகச் சேர்ந்து இங்கு வந்திருக்கிறார்களோ? இப்படியெல்லாம் அவமானப் படுவதைவிட இத்தரையில் பெரிய பிளவு ஏற்பட்டால் அதில் அழுந்தி இறந்து விடலாமே?' என்றெல்லாம் பலவாறு சிந்தித்து பீதியடைந்தாள். ஆனால் உடனே அவள், 'இல்லை. இல்லை. மோகன சுந்தரத்தை நான் ஏமாற்றி விட்டேனென்றாலும் அவனுக்கு மட்டும் என்னிடம் அளவு கடந்த அபிமான முண்டு. ஆதலால் அவன் என்னை அவமானப் படுத்த மாட்டான். மேலும் அவன் மிக்க பெருந்தன்மை யுடையவன். ஏதோ எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். எல்லாம் விசாரித்தால் தெரிந்து விடுகிறது. எப்படியும் நான் மிக்க சிரமத்துடனும் சாமர்த்தியமாகவும் நிலைமையைச் சமாளிக்க வேண்டும். தைரியமும் பொறுமையும்தான் இப்போது தேவை. எப்படியாவது இதைச் சமாளித்து விடுவேன்' என்று தனக்குத் தானே ஆறுதல் கூறிக் கொண்டாள்.

அப்போது ஹேமவதி சீமாட்டி மோகனத்தைப் பற்றி ஒன்றுமே அறியாதவள்போல் அம் மாளிகையின் சொந்தக்காரரான ஆடவரிடம், 'ஐயா, அந்த மோகன சுந்தரம் என்பது யார்? அவன் இங்கே யாருடன் எப்படி வந்தான்?' என்று விசாரித்தாள். அதற்கு அவர், 'ஹேமவதி சீமாட்டியே, அவன் இரத்தின புரியிலுள்ள பெரிய பிரபுவின் குடும்

பத்தைச் சேர்ந்தவன், அவனும் பணக்காரனே. வருஷவாரி இரண்டாயிரம் பவுன் வருமான முடையவன். தியாகராஜன் அவனைப்பற்றி அதிகம் தெரிந்து கொண்டிருக்கிருன். அவன் விஷயங்களை அதிகமாக விசாரிக்க எனக்குச் சாவகாசமில்லை அவனுடன் நடனம் செய்வதற்கு ஒரு பெண்மணியைத் தேடவே நான் வந்தேன்' என்ருர், அச்சமயம் வேறு சில விருந்தினர்கள் வந்ததால் பாக்கியம் தம்பதிகள் அவர்களை வரவேற்கப் போய்விட்டனர். ஆகவே ஹேமவதியும் ராஜேஸ்வரியும் தனியே இருந்ததால் தாயார் மகளைப்பார்த்து, 'பெண்ணே' இதென்ன மர்மம் இவ்விவரங்களெல்லாம் உனக்குத் தெரியாதா?' என்றுகேட்க, அவள், 'அம்மா எனக்கு நிச்சயமாக ஒன்றும் தெரியாது! என்று கூறியதும் ஹேமவதி, 'அந்தப் பையன் தியாகராஜனிடம் உன் சங்கதிகள் எதையேனும் சொல்லிவிட்டிருப்பானே' என்றதற்கு ராஜேஸ்வரி, 'இல்லை அவன் அப்படியெல்லாம் சொல்லமாட்டான். அப்படியே அவன் சொல்லியிருந்தாலும் கூடத் தியாகராஜன் அதையெல்லாம் இங்கு வெளிப்படுத்தி என்னை அவமானத்துக் குள்ளாக்கமாட்டான்' என்று கூறினுள். அதற்கு ஹேமவதி, 'சரி, அவர்கள் இருவரையும் பற்றி நீதான் நன்கு அறிவாய். எனினும் நீ மோகனசுந்தரத்துடன் நடனம் செய்ய விரும்பமாட்டாய் என்றே நினைக்கிறேன். அவன் தன் நிலைமையைப் பற்றி ஏதோ பொய்யையே தியாகராஜனிடம் சொல்லியிருக்க வேண்டும். இதில் ஏதோ தவறு இருக்க வேண்டும்' என்று கூறினுள்.

அதற்கு ராஜேஸ்வரி, 'தாயே இப்போதும் நாம் நமது பழைய சம்பந்தத்தை ஞாபகத்துக்குக் கொண்டு வரவேண்டும். அதாவது என் விஷயத்தில் நீ தலையிட வேண்டாம்.

அதை நானே சமாளித்துக்கொள்கிறேன். இந்த நிலைமையை எப்படி சமாளித்துக் கொள்வதென்பது எனக்குத் தெரியுமென்பதை நீயும் அறிந்திருப்பாய். நீ மோகன சுந்தரத்தை முன் பின் அறியாதவள்போல் இருந்து விடு,' என்றாள். அதற்குத் தாயாரும், 'அப்படியே ஆகட்டும்; உனது யோசனையின்படியே நடந்து கொள்கிறேன்' என்றாள். இதற்குள் அம் மாளிகையின் சொந்தக்காரி ராஜேஸ்வரியைப் பார்த்து, 'பெண்மணியே; நீயும் உனது தாயாரும் காபியைக் குடித்ததும் நான் உனக்கு மோகன சுந்தரத்தை அறிமுகம் செய்து வைக்கிறேன். காபி அறைக்குச் செல்வோம், வாருங்கள்' என்றாள்.

மற்றொரு அறையில் மோகன சுந்தரம் என்ன செய்கிறான் என்பதைக் கவனிப்போம். ஹேமவதியும் அவளது குமாரியும் வந்தது அவனுக்குத் தெரியாதென்றாலும், அங்கிருந்த சிலர் ஹேமவதி சீமாட்டியும், ராஜேஸ்வரியும் வரப்போகிறார்கள் என்று பேசிக் கொண்டது அவனுக்குக் கேட்டபடியால் அவர்கள் வந்து தன்னையும் பார்த்துவிட்டால் என்ன செய்வது யென்று ஏங்கி எவ்வாறு நடந்து கொள்வது என்பதுபற்றி யோசித்துக்கொண் டிருந்தான். தியாகராஜனோ, தான் ராஜேஸ்வரியைக் காதலிப்பதும், அவளை விரைவில் விவாகம் செய்துகொள்ளப் போவதும் யாருக்கும் தெரியக்கூடாதென்று நினைத்தபடியால் ராஜேஸ்வரி அங்கு வந்தாலும் அவளைக் கண்டதும் பரபரப்புடன் எதிர்நோக்கிப் போவதில்லை யென்றும், அதிகமாகப் பழகாதவன் போல் நடந்துகொள்வதென்றும் தீர்மானித்தான். அவ்வேளையில் ஹேமவதியும் ராஜேஸ்வரியும், குழுமியிருந்த அறைக்கு வந்தார்கள். ஹேமவதி வழக்கப்படி மிக்க கண்டிப்பும், பெருந்தன்மையும் உடையவள்போன்ற விரைப்புடனும் விலையுயர்ந்த

ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு, பிறரை லட்சியம் செய்யாதவள்போல் கம்பீரமாக அசைந்து அசைந்து நடந்து கொண்டே வந்தாள், அவளுக்குப் பின்னால் அவளது குமாரி ராஜேஸ்வரியும் தாய் எட்டடியானல் குட்டி பதினறுஅடி என் பதுபோல் கம்பீரத்திலோ, பெருமையிலோ தன் தாய்க்குச் சிறிதும் பின்வாங்காதவள் போல் மிக்க டாம்பீகமான முறையில் தன்னை அலங்கரித்துக்கொண்ட வண்ணம். அதிக கர்வமுள்ளவள் போல் நடந்தாள். ஆனல் அவளது இருதயம் மட்டும் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. மோகனத்தினல் தனக்கு ஏதேனும் அவமானம் நேரிட்டுவிடுமோ என்னும் அச்சம் தான் அதிகமாக இருந்தது.

அவர்கள் இருவரையும் கண்டதும், மோகனசுந்தரத்துடன் பேசிக்கொண்டிருந்த ஒரு பிரபு அவனிடம், 'அதோ ஹேமவதி சீமாட்டியும் அவளது குமாரி ராஜேஸ்வரியும் வந்து விட்டார்களே' என்ருள். அப்பெயரைக் கேட்டமாத்திரத்தில் ஒரு விதமான உணர்ச்சியை மோகனம் அடைந்தானென்ருலும் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு அவன், 'ஓ அந்த அம்மையார் தான் ஹேமவதி சீமாட்டியோ?' என்ருன். அப்போது அங்கிருந்த மற்ருெரு பிரபு, 'அச்சீமாட்டியின் பின்னல் வருபவள் அவளது குமாரியாகிய ராஜேஸ்வரி அவர்கள் இருவரையும் பார்த்தால் இருசகோதரிகளைப்போல் தெரிகிறதே யொழிய தாயும் மகளும்போல் இருக்கிறதா பாருங்கள்' என்று பரிகாசமாகப் பேசினன். அதற்கு மற்ருெருபிரபு, அடேயப்பா! அப்படியொன்றும் பரிகாசமாகப் பேசவேண்டாம். நமது தியாகராஜன் இப்பால் அச்சீமாட்டியின் வீட்டுக்கு அடிக்கடி போய்வருவதுடன் அச்குடும்பத்தில் விசேஷ சிரத்தையுடன் இருக்கிருன் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும்' என்று வேடிக்கையாக எச்சரிக்கை செய்தான். தியாக

ராஜன் மோகனம் ஆகிய இருவருடனும் பேசிக்கொண்டிருந்த் பிரபுக்கள் ஹேமவதிக்கும், அவளது குமாரிக்கும் க்ஷேமம் விசாரிக்க அவர்கள் இருக்குமிடம் சென்றூர்கள். அவர்களை ராஜேஸ்வரி எப்படி வரவேற்று எவ்வாறு பேசுகிருள் என்று மோகனம் அதிக ஆர்வத்துடன் கவனித்தான். தியாகராஜனும் தனக்கு மனைவியாக வரப்போகிற அவள் பிற ஆடவர்களிடம் எவ்வாறு நடந்துகொள்கிருள் என்பதைக் கவனிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவளையே உற்றுப்பார்த்தான். இவ்வாருக மோகனமும் தியாகராஜனும் ஒருவருடைய மனேபாவம் மற்றவருக்குத் தெரியாதபடி ஒரே பெண்மணியை வெவ்வேறு நோக்கத்துடன் கவனித்தார்கள்.

இச்சமயத்தில் அதே மாளிகையில் நடந்த மற்றெரு சம்பவத்தை நாம் கவனிக்கவேண்டும். விருந்தினரை வரவேற்கும் அறையில் பாக்கியம் தம்பதிகளில் மனைவி வெளியே போய்விட்டதால் கணவன்மட்டும் அங்கிருந்த இரண்டொருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு ஆள் அங்குவந்து அவரிடம் ஒரு கடிதம் கொடுத்துவிட்டுப் போனுன். அவரும் தான் சொற்பநேரம் வெளியே போவதற்காகத் தன்னை மன்னிக்கவேண்டுமென்று அங்கிருந்தவர்களிடம் சொல்லிவிட்டு வேறு அரைக்குச்சென்று அதைப் பிரித்துப் பார்த்தார். அது இரத்தினபுரியிலிருந்து எழுதப்பட்டது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"இக்கடிதத்தின் அடியில் கையொப்பமிட்டிருக்கும் உனது பழைய நண்பனின் கையெழுத்தைக்கண்டதும் ஆச்சர்யப்படுவாய். நாம் இருவரும் சந்தித்தும் கடிதப் போக்குவரத்து நடத்தியும் அதிக காலமாய் விட்டது. எனினும் இடையில் சில வருஷங்கள்வரை பார்க்கவில்லை யென்பதற்

காகவே நீ என்னை மறந்துவிட்டிருப்பாய் என்று நான் நினைக்க வில்லை. நம்முடைய சிநேகம் அவ்வளவு நெருங்கியதாய் இருந்ததல்லவா? இப்போதும் உன்னை நேரில் பார்த்து உனது கையைக் குலுக்கவேண்டுமென்னும் ஆசை மிக அதிகமாய் இருக்கிறது. நான் மீண்டும் இரத்தினபுரிக்கு வந்திருக்கிறே னென்றாலும் சில முக்கிய காரணங்களை முன்னிட்டு மாறு பெயருடன் இருக்கவேண்டியதாய் இருக்கிறது. நான் பல வருஷங்களுக்கு முன்னரே உன்னிடம் தெரிவித்த எனது மனமார்ந்த காதலி ரங்கநாயகிச் சீமாட்டியையே மணந்து கொண்டுவிட்டேன். நான் அப்போது அவளைக் காதலித் தேன் என்பதுமட்டும் உனக்குத் தெரியுமேயொழிய மற்ற சந்தர்ப்பங்களும், அப்போதே என்மூலம் அவளுக்குக் குழந் தைகளும் பிறந்திருந்தன என்பதும் உனக்குத் தெரியாது. அந்த விவரங்களையெல்லாம் இப்போதும் எழுத சாத்திய மில்லை. விரைவில் நான் உன்னை நேரில் சந்திப்பேன். அப் போது எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். இக்கடிதம் முக் கியமாக நான் ஏன் எழுதுகிறேனென்றால் எனது ஆசைக் குமாரன் மோகனசுந்தரம் இப்போது கிருஷ்ணகிரிக்கு வந்தி ருக்கிறான். அவன் மிதுனபுரியிலுள்ள பிரபல ஒட்டல் ஏதே னும் ஒன்றில் தங்கியிருப்பான். அவனுக்கு, அவனுடைய தந் தையின் நண்பர் என்னும்முறையில், சமயத்தில் தக்கயோசனை சொல்லக்கூடிய ஒரு பெரியாரின் துணை வேண்டும். ஆதலால் நீ அவனை எப்படியாவது சந்தித்து இக்கடிதத்தை அவனிடம் காண்பித்தால் அவன் ஏன் கிருஷ்ணகிரிக்கு வந்தான் என்ப தைச் சொல்வான். ஆனால் நான் இப்போது இரத்தினபுரி யில் இருக்கிறேன் என்பது யாருக்கும் தெரியலாகாதென் பது உன் ஞாபகத்தில் இருக்கட்டும்.

உனது அன்புள்ள
மனோகரம் பிரபு."

அவர் அக்கடிதத்தைப் படித்து முடிந்ததும் ஒருவிதமான ஆச்சர்யத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தார். தற்செயலாகத் தன் வீட்டுக்கு வந்திருக்கும் அந்த வாலிபனே அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பையனாக இருக்கவேண்டுமென்று யூகித்ததால் ஆச்சர்யமடைந்தார். தன் பாலிய சினேகிதன் மனோகரம் பிரபு பலவித கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் அநுபவித்த பின்னரேனும் அவன் காதலித்த மாதை விவாகம் செய்துகொண்டானே என்று சந்தோஷமடைந்தார். அவர் புத்திசாலியாதலால் இக்கடிதம் கிடைத்திருப்பதை யாரிடமும் பிரஸ்தாபிக்காமல் என்ன நடக்கிறதென்பதை ஜாக்கிரதையாகக் கவனித்துவருவதெனத் தீர்மானித்தார். பிறகு அவர் மோகனசுந்தரத்தினிடம் சென்று மிக்க பரிவுடன் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். மாளிகையின் சொந்தக்காரர் மோகனத்தினிடம் அவ்வளவு அன்புடன் இருப்பதைக் கண்ட தியாகராஜனும் அதிக சந்தோஷமடைந்து, அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் தான் போய் ஹேமவதியுடனும் ராஜேஸ்வரியுடனும் மரியாதையாகப் பேசிவிட்டு வரலாமெனச் சென்றான். அவன் சென்றபின்னரும் மாளிகையின் சொந்தக்காரரான ரங்கநாதம் பிரபு மோகனத்தின் கையைப் பிடித்துக்கொண்டு ஏதோ பொது விஷயங்கள் பலவற்றைப் பேசிக்கொண்டே மெதுவாக நடந்து வேறு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு தனியாகப் போய் ஓரிடத்தில் அமர்ந்த பின்னர் ரங்கநாதம் பிரபு மோகனத்தினிடம், 'அன்புள்ள சினேகிதனே! நான் உனக்கு எவ்வகையிலேனும் உதவி செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறதா? உன் விஷயத்தில் அதிக அக்கறை கொண்ட எவருடைய யோசனையேனும் துணையேனும் இப்போது உனக்கு அவசியமா? என் கேள்விகளைக்கண்டு ஆச்சர்யப்படவேண்டாம். இதோ இக்கடிதத்தைப் படித்துப் பார்.

அப்போது உனக்கு விஷயம் விளங்கிவிடும்' என்று சொல்லிக்கொண்டே அக்கடிதத்தைக் கொடுத்தார்.

அவனும் அதைப் பிரித்துப் பார்த்ததும் சொற்பநேரம் அவன் திக்பிரமையுடன் பேசவும் முடியாதவனுக இருந்தான். அவனது முகத்தில் ஒருவிதமான விசனக் குறி காணப்பட்டது. சொற்பநேரத்துக்குப் பின்னர் மோகனம், 'ரங்கநாதம் பிரபுவே! நீங்கள் என்னிடம் இவ்வளவு அன்பும்பரிவும் காண்பித்ததற்காக மிக்க வந்தனம். நான் இரத்தினபுரியை விட்டுப் புறப்படும்போதே எனதுதந்தை இங்கு தமக்குத் தெரிந்த பாலிய சிநேகிதர் ஒருவர் இருப்பதாகவும், அவருக்கு ஒரு கடிதம் கொடுப்பதாகவும் கூறினர். ஆனுல் நான் இங்கு அதிககாலம் தங்கமாட்டேன் என்று நினைத்தபடியால் அதை வாங்கிவரவில்லை தற்செயலாகத்தான் நான் தியாகராஜனுடைய நட்பைப் பெற்றேன். அவனுக்கு என் பெற்றோர்கள் பணக்காரர்கள் என்பதைத்தவிர வேறு ஒன்றும் அவனுக்குத் தெரியாது. ஆனுல் நான் ஒரு பிரபுவின் கள்ளக் காதலிக்குப் பிறந்தவன் என்பதும், பிறகே எனது தாயும் தந்தையும் கலியாணம் செய்துகொண்டார்கள் என்பதுமட்டும் தெரியும்! என்ருன். அதற்கு அப்பெரியார், 'சரி, அது கிடக்கட்டும். நீ ஏன் கிருஷ்ணகிரிக்கு வந்தாய் என்பது தியாகராஜனுக்குத் தெரியுமா?' என்று வினவ, அவன், 'ஆம் ஒருவாறு தெரியும். அனுல் உண்மையை அப்படியே அறியமாட்டான். அது சொல்வதென்றுல் ஒரு பெரிய கதையாக முடியும்' என்றதும் ரங்கநாதம் பிரபு அவனது கையை அன்புடன் அழுத்தி, 'அது ஒரு பெரிய கதையாக இருப்பதுடன் உற்சாகமில்லாததாகவும் இருக்கலாம். ஆகவே அதைப்பற்றியெல்லாம் இப்போது பேசவும் நமக்குச் சாவகாசமில்லை. நாளையதினம் நீயும் தியாகராஜனும் இங்குவந்து எங்களுடன் ஆகாரம் உட்கொள்ள வேண்

டும். இப்போது நீ மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு உல்லாசமாகக் காலத்தைக் கழித்து விடு. நாம் மற்றவர்கள் கூடியிருக்கும் ஹாலுக்குப் போகலாம்' என்று கூறிவிட்டு அவனுடன் ஹாலுக்கு வந்து சேர்ந்தார்.

இதற்கிடையில் தியாகராஜன் ஹேமவதியும் ராஜேஸ்வரியும் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சென்று ராஜேஸ்வரியின் பக்கத்தில் உட்கார்ந்தான். அவர்களுடன் அம்மாளிகையின் சொந்தக்காரியாகிய பாக்கியம் சீமாட்டியும் இருந்தாள். முதலில் அவர்கள் ஏதோ பல பொது விஷயங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். எனினும் அவன் பேசிய தோரணையிலிருந்தே அவன் தன் மனோபாவத்தை மாற்றிக்கொள்ளக்கூடிய வகையில் ராஜேஸ்வரியைப்பற்றி மோகனத்தினிடமிருந்து ஒன்றும் அறியவில்லை என்பதைத் தாயும் மகளும் உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது இடையில் ஹேமவதி சீமாட்டி, 'தியாகராஜா! நீ இன்று உன்னுடன் யாரோ ஒரு யௌவன வாலிபனை அழைத்து வந்திருப்பதாகத் தெரிகிறதே' என்றாள். அப்போது தியாகராஜன், 'ஆம்; என் குதிரையினால் எனக்கு இந்த சிநேகம் ஏற்பட்டது. நேற்று நான் குதிரையின்மீது போய்க்கொண் டிருந்தபோது ஒரு விபத்து ஏற்பட்டது. அப்போது அந்த வாலிபன் எனக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தான். அதிலிருந்து எங்கள் இருவருக்கும் சிநேகம் ஏற்பட்டது! என்றான். அதற்குச் சீமாட்டி ஏதோ பேச்சில் பேச்சாகக் கேட்பதுபோல், 'அவன் இன்னும் சொற்பகாலம் இங்கு தங்கும் உத்தேசமுண்டா?' என்று வினவ, தியாகராஜன், 'இல்லை. இருக்கமாட்டான். இப்போதே இந்த இரண்டொருநாள் அவன் இங்கு தங்கும்படி செய்ய நான் மிகப் பிரயாசைப்பட்டேன். அவன் கௌரவம் வாய்ந்த குடும்பத்

தைச் சேர்ந்தவன்' என்றதும் சீமாட்டி, 'அவனுடைய குடும்பத்தைப்பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'இல்லை, எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவனே சில விஷயங்களைச் சொல்லிக்கொண்டதிலிருந்து அவன் கௌரவம் வாய்ந்தவனென்று தெரிகிறது மேலும் அவனுடைய நடை, உடை, பாவனைகளும் அவனுடைய பெருந்தன்மையை நன்கு வெளிப்படுத்துகின்றன' என்றான்.

பிறகு ஹேமவதி ஒன்றும் பேசவில்லை. அந்த விஷயத்தில் அவள் அதிகமாகத் தலையிடலாகாதென்று ராஜேஸ்வரி கட்டளையிட்டிருக்கிறாள் அல்லவா? ஆயினும் தியாகராஜன் தன் காதலியிடம் நீ என் சினேகிதனுடன் அறிமுகமாய் விடுவாய். அவனுடன் பேச நீ அதிக திருப்தியுடனேயே இருப்பாய் என்று நம்புகிறேன்,' என்றான். அப்போது ஹேமவதியும் பாக்கியமும் ஏதோ பேசிக்கொண்டிருந்த படியால் ராஜேஸ்வரி அவர்களுக்குக் கேட்காதபடி மெல்லிய குரலில் தன் காதலனிடம், 'எனதன்புள்ள நண்பா, நான் அவனுடன் தாராளமாகவும் திருப்தியாகவும் பேசினால் உனக்குப் பொறாமை ஏற்படாதா? எல்லா மாதர்களும் அவனையே கவனிக்கும்படியான ஒரு வாலிபனை நீ அழைத்து வந்திருக்கிறாயே அப்படிப்பட்டவனுடன் நான் நடனம் செய்தால் நீ மனம் பொறுப்பாயா?' என்று கேட்க அவன், 'இல்லவே இல்லை. நான் பொறாமைப் படமாட்டேன். ஆயினும் நீ அவ்வாறு யூகித்ததுபற்றி நான் உன் அருங்குணத்தைக் கண்டு சந்தோஷப்படுகிறேன்' என்றான். அதற்கு அவள், 'நீ அனுமதி கொடுத்ததுபற்றி எனக்கு மிகச் சந்தோஷம். நாம் இருவரும் விரைவில் விவாகம் செய்துகொள்ளப் போகிறோம். என்பதை நீ மோகனத்தினிடம் சொல்லிவிட்டாயோ?' என்று கேட்க, அவன், 'இல்லை. நான் அதையெல்லாம் அவனிடம்

பேசவில்லை. ஆயினும் பாக்கியம் குடும்பத்தாரும் இதர நண்பர்களும் நம் இருவர் இடையிலும் ஏதோ விசேஷமிருப்பதாக உணர்ந்திருக்கிறார்கள்' என்றான்.

அதற்கு ராஜேஸ்வரி, 'நல்ல வேலை செய்தாய். இப்படிப் பட்ட விஷயங்களை எந்த நண்பரிடமும் அதிகமாகச் சொல்லக் கூடாது. அதிருக்கட்டும். உன் நண்பனாகிய அந்த மோகன சுந்தரம் எவ்வளவு அழகாக ஆடைகளை அணிந்திருக்கிறான் பார்' என்றாள். ஆனால் அவள் மனதில் எத்தகைய விகற்பமு மில்லாதவள்போல் அதைக் கூறினாளே யொழிய அதற்கு முன்னாள் அவனை அவள் பார்த்தபோது ஏழையைப்போல் உடை யணிந்தவன் மறுநாள் இவ்வாறு விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருக்கிறானே யென்று ஆச்சர்யப் படுபவள் போல் காண்பித்துக் கொள்ளவில்லை. அவள் அவ்வாறு சொன்னதைக்கேட்ட தியாகராஜனும், 'ஆம்; அவன் இன்று இவ்வாறு விலையுயர்ந்த ஆடைகளை யணிந்திருக்கிறான். ஆனால் நேற்று நான் அவனைப் பார்க்கும்போது எளிய உடையுடன் இருந்தான். அவன் ஏன் மிதுனபுரிக்கு வந்தான் என்பதை மிக இரகசியமாகச் சொல்லியிருக்கிறான் அதை நான் உன்னைத் தவிர வேறு யாரிடமும் சொல்ல மாட்டேன்' என்று சொல்லி முடிப்பதற்குள், அவள் 'எனதன்புள்ள காதலா! நமக்குள் இரகசிய மென்பதே கிடையாது. நீ சொல்வதை யெல்லாம் நான் மிக்க மதிப்புடன் வைத்துக் கொண்டிருப்பேன். அதை ஒருவரிடமும் சொல்ல மாட்டேன்' என்றாள். அப்போது அவன் மெதுவான குரலில், 'ஐயோ பாவம், அவன் ஒரு பெண்ணிடம் அளவு கடந்த காதல் கொண்டிருந்தானாம்' என்றதும் அவள், 'அப்படியானால் இப்போது காதலுடையவனாக இல்லை போலும்' என்றாள். அதற்கு அவன்,

'ஆம்; அவன் இப்போது காதலுடையவனாக இல்லை தான் அப் பெண்ணின் கையிலிருந்து தப்பியதற்காகவும் அவன் சந்தோஷப்படுகிறான். நீ இதையெல்லாம் உன் தாயாரிடமும் சொல்லாதே' என்று கூறினான்.

அதற்கு ராஜேஸ்வரி, 'இல்லவே இல்லை. நான் ஒரு வார்த்தை கூட சொல்லமாட்டேன். நீ தயவு செய்து முழு விவரத்தையும் சொல். அவ் வாலிபனுடைய கதை வேடிக்கையாக இருக்கும்போ லிருக்கிறது. மேலும் நீ அவனுடன் சிநேகம் செய்து விட்டதால் அதைத் தெரிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாய் இருக்கிறது' என்றதும் தியாகராஜன் மேலும் சொல்லத் தொடங்கி, 'அவன் யாரோ ஒரு பிரபு குலப் பெண்ணினிடம் காதல் கொண்டு அவள் இன்பத்தையும் அனுபவித்தானாம். அவள் பெயர் இன்னதென்று அவன் சொல்லவில்லை. நானும் அதைக் கேட்கவில்லை. அவள் இரத்தின புரியைச் சேர்ந்தவளே யாயினும், இப்போது நமது ஊருக்கடுத்த மிதுன புரியில் இருக்கிறாளாம். அவனுடைய நிலைமையில் மாறுதல் அடைந்து அவன் பணக்காரனாய் இருப்பதால் அவளைச் சோதிக்கும் பொருட்டு இங்கே வந்தானாம். அதற்காகவே அவன் ஏழையைப்போல் ஆடைகளை அணிந்திருந்தான்' என்றதும் அவள், 'ஆ, அப்படியா! என்ன தந்திரம் செய்தான். சோதனையின் முடிவு என்ன ஆயிற்று,, என்று அவள் கேட்டாள். அப்போது அவள் தன் உணர்ச்சியில் எத்தகைய மாறுதலும் ஏற்படாதவளைப்போல் நடந்து கொண்டா ளென்றாலும் உள்ளத்தில் மட்டும் ஒருவிதமான கவலை தோன்றியது.

இதற்குள் தியாகராஜன் எதிரில் தலையை நிமிர்ந்து பார்த்ததில் மோகனசுந்தரம் காணப்படாமையால், 'அடடா,

அவன் எங்கே காணோம். அவனை ரங்கநாதம் பிரபுவினுடன் இந்த ஹாலில் மற்றொரு மூலேயில் விட்டுவிட்டு வந்தேன். அவனைக் காணோமே, அவனைத் தனியாகவிடலாகாது. இங்கு எல்லாரும் அவனுக்குப் புதியவர்களாகையால் தனியாக இருந்தால் கஷ்டப்படுவான். ஆதலால் நான் போய்வருகிறேன். நீமட்டும் தயவுசெய்து யாரிடமும் ஒரு வார்த்தை கூடச் சொல்லாதே,' என்றான். உடனே அவளும், ஒரு சிறிதும் சந்தேகப் படவேண்டாம். நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். என்னைத் தாராளமாக நம்பு என்றதும் அவன் அவ்விடத்தை விட்டுச் சென்றான். அவன் அந்த ஹாலினுள் மற்றொரு மூலைக்குப் போய்ச் சேர்வதற்குள் ரங்கநாதம் பிரபுவும் மோகனமும் வேறு அறையிலிருந்து அங்கு வருவதைக் கண்டான். ரங்கநாதம் பிரபுவும், 'மோகனம்! நீ சிறிதுநேரம் உனது நண்பன் தியாகராஜனுடன் இங்கேயே இரு. நான் போய் எனது மனைவியுடன் சில விஷயங்களைப் பேசிவிட்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு வெளியே போனார். அவர் போகும் வழியிலேயே பாக்கியத்தையும், ஹேமவதிசீமாட்டி, ராஜேஸ்வரி ஆகியோரையும் சந்தித்தார். உடனே அவர் 'எனது அருமை மனைவியே! நானும் உன்னைத்தான் எதிர் பார்த்து வருகிறேன். நீ ராஜேஸ்வரிக்கு நமது புதிய நண்பன் மோகனசுந்தரத்தை அறிமுகம் செய்து வைப்பாய் என்று நம்புகிறேன்' என்றார். இதற்குள் ஹேமவதிசீமாட்டி ரங்கநாதம் பிரபுவினிடம், 'ஐயா, உங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருக்கும் மோகனசுந்தரம் எல்லாருடைய கவனத்தையும் இழுத்திருக்கிறான்போல இருக்கிறதே. தியாகராஜனுக்கும் அவனது சினேகிதன் யார் என்று நான் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறேன்' என்றாள்.

அதைக்கேட்ட ரங்கநாதம் பிரபு, 'ஏன்; அவனுடைய

கௌரவத்தில் ஏதேனும் சந்தேகம் உளதோ? அப்படியெல்லாம் ஒன்றும் நினைக்காதீர்கள்' என்றார். அதற்கு ராஜேஸ்வரி, அப்படியெல்லாம் சந்தேகம் ஒன்றுமில்லை. என் தாயாருக்கு ஒன்றும் தெரியாது. மோகனசுந்தரம் கௌரவமும் பெருந்தன்மையும் உள்ளவனே என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை' என்று கூறியதும் அவர், 'கௌரவத்தில் சந்தேகமில்லை யென்றால் பின்னர் என்ன சந்தேகம். அவனைப்பற்றி முழு விவரமும் தெரியாமல் இருப்பதால் ஏதேனும் ஆச்சரியம் தோன்றலாம் எனினும் தக்கவேளை வரும்போது அவனுடைய விஷயமெல்லாம் தெரிந்துவிடும். அவன் யார் என்ன என்பது எனக்கு விவரமாகத் தெரியும்' என்றார். அப்போது அவர் எவ்வளவு தூரம் அவனைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறார் என்பதை அவர் முகத்திலிருந்தே தெரிந்துகொள்பவள்போல் ஹேமவதி அப்பெரியாரது முகத்தைப் பார்த்துக்கொண்டே, 'ஓ, அப்படியா! உங்களுக்கு அவனைப் பற்றித் தெரியுமோ?' என்று வினவ அவரும், 'ஆம், அவனுடைய தகப்பனார் உயர்ந்த பதவியிலுள்ள ஒரு பெரிய கனவான் என்பது எனக்குத் தெரியும்' என்று உறுதியுடன் கூறினார்.

அப்போது ஹேமவதி, 'அப்படியானால் இந்த இளைஞன் மோகனசுந்தரம் பிரபுவா அல்லது வேறு ஏதேனும் பட்டம் உடையவனா? எப்படி?' என்று வேடிக்கையாகப் பேசுபவள் போல் கேட்டாள். அதற்கு ரங்கநாதம் பிரபு, 'துரதிர்ஷ்டவசமாக அவனது பிறப்பு சம்பந்தமாக ஒரு இரகசிய மிருக்கிறது. ஆனால் இப்போது ஒன்றும் அதிகமாகச் சொல்ல முடியாது ஆயினும் அவனது தந்தை யார் என்பதும், அவர் ஒரு பெரிய பிரபு என்பதும் எனக்குத் தெரியும். மேலும் அவர் எனது பாலிய சினேகிதர். அவர் தனது குமாரனுக்குப் பெரிய அந்தஸ்தைக் கொடுக்கக்கூடிய அந்தஸ்திலுள்ளவரே;

என்று கூறினர். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அவரது மனைவி பாக்கியம் சீமாட்டி, 'நாதா; உங்களுக்கு இச் சங்கதிகளெல்லாம் எப்படித் தெரிந்தது. இதையெல்லாம் கேட்க எனக்கு மிக்க சந்தோஷமாய் இருக்கிறதே. அவனைப் பார்த்தது முதலே அவனிடம் எனக்கு ஒருவிதமான அனுதாபமும் ஆர்வமும் ஏற்பட்டுவிட்டிருக்கிறது' என்று கேட்க, அவர், 'விவரங்களெல்லாம் பேசிக்கொண்டிருக்க இப்போது சாவகாசமில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் உண்மை என்பதைமட்டும் உறுதி கூறமுடியும். எல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போது நீ ராஜேஸ்வரியிடம் மோகனத்தை அறிமுகம் செய்துவை. அவர்களிருவரும் அடுத்தமுறை நடனத்தில் கலந்துகொள்ளட்டும். இதில் ராஜேஸ்வரிக்கு இஷ்டமுண்டா என்பதை முன்னடியாகத் தெரிந்துகொள்' என்ருர். அப்போது இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ராஜேஸ்வரி, 'ஆ, எனக்கும் அதிக சந்தோஷமே. என் விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டுள்ள தம்பதிகளாகிய உங்கள் இஷ்டத்தை மீறுவேனு?' என்று கூறினர்.

உடனே பாக்கியம் சீமாட்டியும் அவளது கணவனுன ரங்கநாதம் பிரபுவும் மோகன சுந்தரத்தை அழைத்து வரப் போனுர்கள். ஹேமவதி சீமாட்டியும், ராஜேஸ்வரியும் தனியாக இருந்ததால் மகள் தாயைப் பார்த்து, 'இப்போது நடந்த விஷயங்களால் மோகன சுந்தரம் தியாகராஜனிடம் எதையும் அதிகமாகச் சொல்லிவிடவில்லை என்று ஏற்படுகிறதல்லவா ? அவன் ஏதோ பிரபு குலத்தைச் சேர்ந்தவனுகவே தெரிகிறது' என்ருள். அதற்கு ஹேமவதி சீமாட்டி, 'இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. எனக்கு விஷயமே ஒன்றும் விளங்கவில்லை' என்ருள். அப்போது ராஜேஸ்வரி, 'தாயே! எனக்கு மட்டும் எப்போதும் ஒரு சந்தேகமுண்டு. அதாவது

மோகன சுந்தரத்தின் பெற்றோர்கள் விஷயம் மர்மமானதே என்பதும், அதன் ஏதோ உயர் குலத்தில் பிறந்தவனாகவே இருக்கவேண்டு மென்பதும் எனது நீண்ட நாளைய சந்தேக மாகும்' என்றாள். இதற்குள் மோகனம் அம் மாளிகையின் சொந்தக்காரர்களுடன் சமீபத்தில் வந்து விட்ட படியால் ஹேமவதி சீமாட்டி, 'அவனும் வந்து விட்டான். மிக்க ஜாக்கிரதையுடன் நடந்து கொள். சாமர்த்தியமாக நிலைமையைச் சமாளித்துக் கொள்ளா விட்டால் தியாகராஜனை இழக்க வேண்டியதாக வரும். பிறகு உன் பாடு திண்டாட்டமாய் விடும். ஆதலால் எச்சரிக்கையுடன் நடந்து கொள்' என்றாள். அதை அவள் சொல்லி முடித்ததும் அவர்களும் வந்து விட்டார்கள். பாக்கியம் சீமாட்டியும் முறைப்படி மோகனத்தை ராஜேஸ்வரிக்கு அறிமுகம் செய்வித்தாள். அவளும் அவனை முன்பின் அறியாதவள்போல் சாந்தமானமுறையில் வணங்கினாள். அப்போது அவளுக்கு ஏற்பட்ட உணர்ச்சியை மறைக்க எவ்வளவோ முயன்றாளென்றாலும் அவளது முகத்தில் மட்டும் நிறம் ஒருவாறு மாறுதலடைந்தது. அது போலவே மோகனத்தின் முகமும் சிறிது வெளுத்ததென்றாலும் அவன் மிக்க மனோ உறுதியுடன் இருந்தான். அவன் தனது கரத்தை ராஜேஸ்வரியிடம் கொடுத்தபோது அதைப் பிடித்த ராஜேஸ்வரியின் கை மிகமிக நடுங்குவதை அறிந்தான். இவ்வாறாக அவர்கள் அறிமுகம் செய்விக்கப்பட்டார்கள்.

90-வது அத்தியாயம்.

மறைவான சம்பாஷணை:

பாக்கியம் சீமாட்டியும், ஹேமவதி சீமாட்டியும் ஏதோ பேசிக் கொண்டிருக்கையில் ரங்கநாதம் பிரபு வேறு பல விருந்தினர்களை உபசரித்துக் கொண்டிருந்ததால் ராஜேஸ்வரியும் மோகன சுந்தரமும் ஒரு வார்த்தையையும் பேசாமல் எதிரில் இருந்த நடன அறைக்குச் சென்றார்கள். இவர்கள் இருவரையும் பார்த்த தியாகராஜனும், தனக்கு மனைவியாகப் போகிற பெண்மணியுடன் தன் நண்பனை அறிமுகம் செய்து வைத்து விட்டதற்காகச் சந்தோஷமடைந்த வண்ணம், அங்கு நடனஞ்செய்ய இஷ்டப்படாத வேறு பல பிரபுக்களுடன் பேசிக்கொண் டிருந்தான். ராஜேஸ்வரியும், மோகன சுந்தரமும் நடன அறையில் நுழையும்போது பல ஆடவரும் மாதரும் நடனம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் அதை முடித்ததும் வேறு பலர் நடனம் ஆரம்பித்தார்கள். அந்த இடைக் காலத்தில் மோகன சுந்தரமும், ராஜேஸ்வரியும் ஒரு ஆசனத்தில் அமர்ந்தனர். இருவரும் தங்களுடைய இக்கட்டான நிலைமையை உணர்ந்தனர். மோகன சுந்தரம், தன் நிலைமையை ராஜேஸ்வரி, தியாகராஜன் மூலமேனும், ரங்கநாதம் பிரபுவின் மூலமேனும் அறிந்திருப்பாளென்றும், அவ்வாறில்லையென்றால் தான் அதை உடனே தெரிவிக்க வேண்டுமென்றும், அதனால் அவன் அவளுடைய அன்பை மீண்டும்பெற விரும்பவில்லையென்றாலும், தன் உண்மை நிலை அவளுக்குத் தெரிந்தால் அவள் தன் தவறுதலை உணர்ந்து வருத்தப்படுவாளென்றும் நினைத்தான். ராஜேஸ்

வரியோ எப்படி மோகன சுந்தரத்துடன் பேசுவது என்று அறியாமல் கஷ்டப்பட்டாள். மோகன சுந்தரத்தின் நிலைமையிலும் அந்தஸ்திலும் உயரியமாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவள் கேள்விப்பட்ட பல விஷயங்களாலும் உணர்ந்தாள். அவன் நல்ல நிலைமையி லிருப்பதால் இப்போதேனும் தன்னுடைய யோசனையை அங்கீகரிப்பானு என்பதை அறிய விரும்பினுள். அவள் தான் அழகும், யௌவனமும் வாய்ந்தவளாயும், சகலவித சாமர்த்தியங்களும் பொருந்தியவளாயும் இருப்பதால் தியாகராஜனையும் விவாகம் செய்துகொண்டு அவனுக்கு உண்மையாய் இருப்பவள்போல் நடித்துத் தன் மனதைக் கொள்ளைகொண்ட மோகன சுந்தரத்தினிடமும் இன்ப வாழ்க்கையை அனுபவிக்கலாமென நினைத்தாள். ஆயினும் உடனே எதைப் பற்றியும் ஆவலாகப் பேசிவிட அவளுக்குத் தைரியம் வரவில்லை. மேலும் மோகன சுந்தரம் தன்னை இவ்வாறு சோதனை செய்தானே என்னும் ஆத்திரமும் சிறிது இருந்தது ஆகவே அவள் முதலில் பேசவில்லை.

மோகனசுந்தரமும் தாங்கள் இருவரும் இவ்வாறு பேசாமல் உட்கார்ந்திருப்பதற்கு வெட்கமடைந்தானென்றாலும், எப்படி எது விஷயமாய் முதலில் பேசுவது என்பதை அறியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். தான் அந் நேரத்தில் அங்கு இருக்க நேர்ந்ததற்காகவும் அவன் கவலைப்பட்டான். தன்னுடைய பெருமையாலும் கர்வத்தாலும்தானே அங்கிருக்க நேர்ந்தது என்பதை யறிந்து தனது முட்டாள் தனத்துக்காகவும் வருந்தினுன். ஆயினும் அங்கு கூடியிருந்த அனைவரும் ராஜேஸ்வரியும் மோகனசுந்தரமும் புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கிறுர்கள் என்று நினைப்பதால் அவர்கள் எதிரில் பேசாமல் இருவரும் வாடிய முகத்துடன் உட்கார்ந்திருந்தால் அவர்கள் ஏதேனும் நினைத்தால் என்ன

சொல்வது என்னும் அச்சத்துடன் அவளோடு பேசுவ தென்று முடிவு செய்து, 'ராஜேஸ்வரி நீ இங்கேயே உட்கார்ந் திருப்பதென்று நினைத்திருக்கிருயா அல்லது சிறிது தூரம் உலாவலாமா,' என்று கேட்டான். அவனுக்கு அதைத் தவிர வேறென்ன பேசுவதென்று தோன்றவில்லை. அதற்கு அவள், 'நான் என்ன செய்ய வேண்டுமென்று மோகன சுந்தரம் விரும்புகிருனே அப்படியே செய்யத் தயாராக இருக்கிறேன்' என்று ஒருவாறு தன்னை நேசிப்பவனைக் கண்டிப்பவள் போலத் தொனித்த குரலில் பேசினுள். அதற்கு அவன் 'இரண்டாவது செட் நடிகர்கள் இப்போது நடனம் ஆரம்பிக்கும் சமயம். நாமிருவரும் தயாராக இருந்து நடனத்தில் இறங்குவோமா' என்ருன். அவளும், 'சந்தோஷத்துடன் இறங் கத்தயார். ஆனல் உனக்கு நடனத்தில் பிரியம்தானு" என்று வினவலும் மோகனம், 'எனக்கு நடிக்கத் தெரியுமா என்று கேட்பதுபோலல்லவோ இருக்கிறது. என் நிலைமைமாறி நான் சேவகனை அமர்வதற்கு முன்னர் நானும் பெரிய மனிதர்கள் வீட்டுப் பையன்கள் படிக்கும் பாடசாலையில் கல்வி கற்றேன் என்று உன்னிடம் சொல்லியிருக்கிறேன் அல்லவா?' என்று கேட்டான். அதற்கு அவள் மிக்க மனவருத்தமடைந்தவளே போல், 'மோகனம்! இப்போது நீ பேசியது தவறு. நீயாகக் குதர்க்கம் செய்யவேண்டாம். உனக்கு இப்போது நடிப்ப தில் பிரியமிருக்கிறதா என்று கேட்டேனேயொழிய நீ சொல் லும் பொருளில் நான் கேட்கவேயில்லை. பழைய பேச்சுகளை யும் சந்தர்ப்பங்களையும் நீ இப்போது நினைவுக்குக் கொண்டு வருவதென்ருல் நானும் ஒரு சந்தர்ப்பத்தை ஞாபகத்திற் குக் கொண்டுவர விரும்புகிறேன். உன் பெற்ருேர்கள் யார் என்று உனக்கே தெரியாதபோதே அவர்கள் நல்ல அந்தஸ்துடைய வர்களாகத் தான் இருக்கவேண்டுமென்று நான் உறுதியுடன் கூற வில்லையா?' என்று கேட்டாள்.

ராஜேஸ்வரி அப்போதே உண்மையைப் பேசினுள் என்பது இப்போது அவனது ஞாபகத்திற்கு வரவே, அப்போது அவ்வளவு அன்புடனும் பிரியத்துடனும் உண்மையைக்கண்டு பிடித்து நேசித்த அவள் விஷயத்தில் தான் மிக்க கடுமையாய் நடந்துகொண்டதற்காக வருத்தப்பட்டான். ஆகவே அவன் ஒன்றும் பேசமுடியாமல் மௌனமாக இருந்தபோது அவள் மேலும் பேசத்தொடங்கி, 'நான் அப்போது கூறியது உண்மையே என்று இப்போது தெரிந்துவிட்டதல்லவா? நீ உயரிய அந்தஸ்திலுள்ளவர்களுக்கே பிறந்தவன் என்னும் நம்பிக்கை எனக்கு ஏற்பட்டதனுல்தான் நான் அவ்வளவு தாராளமாக உன்னிடம் நடந்துகொண்டேன். இப்போது அதைப்பற்றியெல்லாம் பேசக்கூடாதல்லவா? எனக்கும் உனக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையென நீ நேற்று சொல்லிவிட்டாயே?' என்று வருத்தத்துடன் கூறலும், மோகனம் மனுேறுதியுடன் பேசுகையில், 'ராஜேஸ்வரி நான் சில விஷயங்களை உன்னிடம் விளக்கவேண்டியதாக இருக்கிறது. ஆனுல் அவற்றையெல்லாம் இந்த நடன அறையில் பேசுவது சாத்தியமாக இல்லை. எனக்காக இல்லாவிட்டாலும், உன்நன்மையைக்கோரியாவது நாம் இங்கு மிக்க ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டியதாக இருக்கிறது. நடனம் முடிந்தபின்னர் சில நிமிஷநேரம் என் விஷயத்தில் கவனம் செலுத்தினுல், நாம் அதோ இருக்கிற அறையில் தனியாகச் சென்று பேசக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். அப்போது எல்லாம் பேசிக்கொள்ளலாம்' என்ருன். உடனே நடனமும் ஆரம்பமாயிற்று. நடன அறையில் தியாகராஜன் இல்லாமல் இருந்ததால் ராஜேஸ்வரி மோகனத்துடன் சரச சல்லாபமான முறையிலெல்லாம் நடனம் புரிந்து தன்னிடத்தில் வெறுப்பு கொண்டிருக்கிற மோகனத்தைப் பலவித தந்திரங்களாலும் மாற்றிவிடுவதென நினைத்தாள். ஆயினும் அந்த உபாயங்களையும் அங்குக் கூடி

யுள்ள ஜனங்கள் அறிந்து கொள்ளாதவாறு அனுஷ்டிப்பதென்றும் தீர்மானித்தாள். நடனத்தில் பலவிதமான மனக்குறிப்புகளை யெல்லாம் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தன்னுடன் நடனம் புரியும் பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ நன்ருகத் தெரிவித்துவிடலாம். அந்தக் கலையில் தேர்ந்தவர்கள் பலவித உபாயங்களையும் அனுசரிக்கக்கூடும். பாம்பின் கால் பாம்பிற்கே தெரியும் என்பதேபோல் அந்தக் கலை ஞானமுடையவர்களுக்கே அது தெரியும். நடனத்தில் அவள் காட்டிய குறிப்புகளை யெல்லாம் அவன் நன்கு உணர்ந்தான். ஆயினும் என்ன செய்வது? அவள் உண்மையிலேயே தன்னை மனமாரக் காதலிக்கிருளா என்பது அவனுக்கு அப்போதும் சந்தேகமாகவே இருந்தது. நேற்று அவள், அவனை மணந்து கொள்ள மறுத்ததற்காக இப்போதேனும் வருந்துகிருளா என்பதும் சந்தேகமே. ஆயினும் இப்போது அவள் அவ்வளவு தூரம் மன்னிப்புக் கேட்பதைப்போல் வருந்துவதால் அவளது அழகையும் அந்தஸ்தையும் உத்தேசித்தேனும் அவளை மன்னித்துவிடலாமா என்று நினைத்தான். ஆயினும் திடமாக எவ்வித முடிவுக்கும் வர முடியவில்லை. இளம் வயதினனாய் இருந்தபடியால் இப்படிப்பட்ட நிலைமைகளிலெல்லாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்னும் அனுபவ மற்றவனாக இருந்தான். அதற்கு முன் நாள் அவள் செய்த துரோகமும் அவனுடைய மனதை விட்டு அகலவில்லை. ஆகவே அவன் அவளுடைய குறிப்புகளுக்கெல்லாம் பதில் குறிப்பு காட்டாமல் பொறுமையுடன் அவள் சாகசங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு முறைப்படி நடனம் செய்தான்.

ராஜேஸ்வரியும் இவ்வளவு சாகசங்களையும் மேற் போக்காகச் செய்தாள் என்றும் சொல்ல முடியாது. உண்மையிலேயே அவள் அந்த இளைஞனை மனமாரக் காதலித்தாள்

என்பது வாசகர்கள் அறிந்ததே. அவனிடம் அவளுக்கு அளவு கடந்த மோகம். அவன் இன்பத்தை அனுபவிப்ப தென்றால் அதுவே அவளுக்கு மோட்சம். ஆகவே அந்த விசார உணர்ச்சியினலேயே அவள், தன் ஆசைகளை யெல் லாம் நடனத்தில் குறிப்பாக அவனுக்குத் தெரிவித்தாள். நடனம் முடிந்த பிற்பாடு ராஜேஸ்வரியும் மோகனமும் ஏதே தோ பொதுவாகப் பேசிக்கொண்டே யாருக்கும் தெரியாத படி மெதுவாக வேறு அறைக்குப் போய்விட்டனர். அங்கு அவர்கள் தனியாக இருந்தபடியால் மோகனத்துக்குச் சிறிது புத்தி மாறியது. அவள் உருவத்தை உற்றுப் பார்த்தான். ஆ! என்ன அழகு? ராஜேஸ்வரி இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் அவ்வளவு அழகுள்ளவைகளைப்போல் அவனுக்குக் காணப்பட்டாள். உண்மையிலேயே அவள், அது இரவாக இருந்தபடியாலும், பல ஆடவரும் கூடும் இட மாக இருந்தபடியாலும், மெல்லிய தூய வெண்மையான ஆடைகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்ததால் அவள் இரதியைப்போலக் காணப்பட்டாள். அவளுடைய மார்பகம் ஆடையினல் மூடப்பட்டிருந்தும் அவனது கண் களைக் கவர்ந்தது. சபல முடையவனைய்த் தடுமாற்ற மடைந் தான். ஆயினும் இவ்வளவு அழகாகத் தோன்றும் இம் மாது தானே, அதற்கு முன் நாள் இரத்தினம் தாங்கிய விஷப் பாம் பைப்போல் நடந்து கொண்டாள் என்பதும் அவனது ஞாப கத்துக்கு வந்தது. ஆகவே இன்னதுதான் செய்வதென்று தெரியாமல் திண்டாடினன். அவனது முகக் குறிப்பால் அவன் ஏதோ மனக்குழப்பமடைந் திருக்கிறன் என்பதை அறிந்த ராஜேஸ்வரி அவனிடம், 'அன்புள்ள மோகனம், என் னிடம் ஏதோ சில விஷயங்களைப் பேசவேண்டு மென்று சொன்னயே. நாம் இங்கு அதிகநேரம் இருக்கமுடியாதென் பதையும், நம்மைத் தேடிக்கொண்டு எவரேனும் வந்துவிடலா

மென்பதையும் உணர்ந்தாவது சீக்கிரத்தில் பேசிமுடி' என்று டிறிக்கொண்டே காமவிகாரம் கொழுந்துவிட்டெரியும் தனது பார்வையை அவன்மீது செலுத்தினுள். அவன் மிக அடக்கத்துடனும் பீதியுடனும் பேசுபவன்போல், 'ராஜேஸ்வரி சீமாட்டியே, நான் இங்கு உன்னை அதிகநேரம் தங்கும்படி செய்யமாட்டேன்' என்றதைக் கேட்ட ராஜேஸ்வரி, 'மோகனம், இதென்ன நீ இவ்வாறு யாரோ புதியமாதுடன் பேசுவதுபோல் பேசுகிருயே. நான் உன்னைக் கட்டியணைத்த பழைய ராஜேஸ்வரியல்லவா? நான் உனக்குச் சொந்தமானவள் தானே' என்று பரிவுடன் கூறினுள்.

அப்போது அவன், 'அதெப்படி முடியும். நீ எப்படி எனக்குச் சொந்தமானவள் ஆவாய். நீ வேறுஒருவனை மணக்கப்போவதாக நேற்று என்னிடம் கூறவில்லையா? நீ அவனைக் கலியாணம் செய்துகொண்ட பின்னர் நான் எப்படி தாராளமாக நீ எனக்குச் சொந்தமானவளெனக் கூறிக்கொள்ள முடியும்' என்று கேட்டான். அதற்கு அவள், நான் எப்போதும் உனக்குச் சொந்தமானவளே' நம் இருவரிடையில் இனியும் அத்தகைய சந்தேகத்துக்கு இடமுண்டா?' என்ருள். அதற்கு அவன், 'மாதே நான் கூறுவதை நிதானமாகக்கேள், நேற்று நான் உன்னை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றுசொன்னேன். நீ அதற்கு மறுத்துவிட்டாய். ஆகவே, நான் ஒரு ஏமாற்றப்பட்ட காதலனுக உன் எதிரில் நிற்கிறேன். நானும் சுய மதிப்பையுடைய ஆடவன் அல்லவா! ஹேமவதி சீமாட்டியின் சீமந்த புத்திரியை மணப்பதென்ருல் எனக்கும் பெருமைதானே. ஆனுல் நீயோ கள்ளக்காதலனுக மட்டுமே ஏற்றுக்கொள்வேன் எனக் கூறிவிட்டாய். இப்போது என் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நான் ஒரு பெரிய பணக்காரனுடைய பிள்ளையே. என் தந்தை

எனக்கு எவ்வளவு செல்வத்தையும் கொடுக்கத் தயாராக இருக்கிறுர். என் தந்தையும் தாயும் இப்போதுதான் விவாகம் செய்துகொண்டார்கள். நான் உன்னைக் காதலித்ததுபோல் என் தந்தை என் தாயைக் காதலித்த சமயத்தில் நான் பிறந்துவிட்டவன்' என்றதும் அவள் அதிக ஆர்வத்துடன், 'நீ என்னைக் காதலித்தாயா? இப்போதும் நீ என்னைக் காதலிக்கத் தான் வேண்டும்' என்று கூறிக்கொண்டே அவளது கரத்தை அவன் கழுத்தில் போட்டு அணைத்துக்கொண்டு, அவன் தன் அணைதலினின்றும் விடுவித்துக்கொள்ளு முன்பு அவன் முகத்தில் பல அன்பான முத்தங்களைக் கொடுத்தாள். எனினும் அவன் அவளிடத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டான். ஏனெனின் அப்போது அவன் தன் தாய்தந்தையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததால் அவர்களுடைய உருவமே அவன் மனக்கண்முன் தோன்றவே, அவன் தன் தந்தையிடம் கூறிய உறுதிமொழி ஞாபகத்துக்கு வந்துவிடவே அவன் அவ்வாறு விலகிக்கொண்டான். அவன் விலகிக்கொண்டதால் ஆத்திரமடைந்த ராஜேஸ்வரி அதிக வருத்தத்துடன், 'நீ என்னிடத்திலிருந்து விடுவித்துக்கொண்டு தூரம் போய்விடுகிறுயே இது நியாயமா?' என்றுகேட்டாள். அதற்கு அவன் 'நீ வேறு ஒருவனைக் கலியாணம் செய்துகொள்வதாகக் கூறினுயே. அவன் யாராக இருந்தாலும் நான் அவனுக்குத் துரோகம் செய்யலாகாதல்லவா?' என்றுன்.

அதைக் கேட்ட ராஜேஸ்வரி அதிக துக்கத்துடன், 'என் மனதை வருத்துவதற்காகவே நீ இவ்வாறெல்லாம் வேதாந்தம் பேசுகிறுய். இருக்கட்டும்' என்று கூறிக்கொண்டே கண்ணீர் வடித்தாள். பெண் என்றுல் பேயும் இறங்கு மல்லவா ? அவள் கண்ணீர் விட்டு அழவே, அவளிடம் வெறுப்புகொண்டிருந்த அவனது மனமும் இளகிற்று. ஆகவே அவன், 'அழா

தே. நான் ஏன் உன் மனதை வருத்த வேண்டும். அப்படி யெல்லாம் உன் விஷயத்தில் நடந்துகொள்ள மாட்டேன். நான் உன் கடமையை ஞாபகப் படுத்தினேனே யொழிய வேறென்றுமில்லை' என்றான். அதற்கு அவள், 'நீ எனக்கு ஆறுதல் கூறுவதைக் காண நான் மிகச் சந்தோஷ மடைகிறேன்' என்று கூறிக்கொண்டே அவனது கரத்தைப் பிடித்தாள். அவன் அதை விடுவித்துக் கொள்ளாததால் அவள் அதை அழுத்தினாள். மேலும் அவள், 'அன்பா! உன்னுடைய நிலைமையில் சிறந்ததொரு மாறுதல் ஏற்பட்டிருப்பதைப்பற்றி நான் எவ்வளவு சந்தோஷமடைகிறேன் தெரியுமா? உனக்கு அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்காக நான் உன்னைப் பாராட்டுகிறேன். நான் உன் பிறப்பு சம்பந்தமான நிலைமையை முன்னரே ஜோசியங் கூறியதை நீ ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பதால் நான் இன்னும் அதிக சந்தோஷப் படுகிறேன். முதன் முதலில் உன்னைப் பார்த்தபோது நீ அப்போதுள்ள நிலைமைக்கு அதிக மேற்பட்ட அந்தஸ்துடையவனாகவே இருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. அப்போது உன் சரித்திரம் உனக்கு எவ்வளவு தெரிந்திருந்ததோ அவ்வளவையும் என்னிடம் கூறினாய். இப்பால் தெரிந்த உண்மையை என்னிடம் சொல்ல மாட்டாய் போலும்; மோகனம்! உன் தகப்பனார் யார்? நான் ஏதோ வேடிக்கைக்குக் கேட்கிறேன் என்று நினைக்க வேண்டாம்' என்றாள். அப்போது அவன், 'ராஜேஸ்வரி' நான் இப்போது விவரமொன்றும் சொல்லமுடியாது. எனது தந்தை பிரபுப் பட்டத்தை யுடைய ஒருவர் என்பதை மட்டும் இப்போது தெரிவிக்கிறேன்' என்றான்.

அதைக் கேட்ட ராஜேஸ்வரி, 'இன்னமும் என்னை ராஜேஸ்வரி என்றுதானா சொல்ல வேண்டும். அன்புள்ள கண்

மணி என்று அழைக்கலாகாதா? என்னை அடியோடு வெறுத்துவிட்டாயா என்ன? நீ என்னை அவ்வாறு வேண்டிய சோதனைக்குள் என்னை உட்படுத்தியதற்காக நான் உன்னை மன்னித்து விடுகிறேன். அவ்வாறே நீயும் நான் சொன்ன பதிலுக்காக என்னை மன்னித்து விடு. நமது காதல் இரகசியமும் உன் பெற்றோர்களுக்குத் தெரியுமென்று நீ சொன்னாயே. அவர்கள் தான் உனக்கு இந்த யோசனையைச் சொல்லிக் கொடுத்தார்களோ?' என்று கேட்டாள். அதற்கு அவனும், 'ஆம்; அவர்கள் தான் சொல்லிக் கொடுத்தார்கள். அதை மறைக்க நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நீ தெரிந்து கொள். அந்த சோதனையே கடைசியானது. ஏமாற்றமடைந்து வெறுப்புடன் தான் நான் உன்னைவிட்டு ஓடினேன். எனது மாறுதலடைந்த நிலைமையைப் பற்றியும் உன்னிடம் சொல்லிக்கொள்ள அப்போது நான் விரும்பவில்லை. அப்போது எனக்கு அவ்வளவு ஆத்திரம் உதித்திருந்தது. பின்னர் நிதானமாக ஆலோசித்துப் பார்த்ததில் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லாமல் இவ்வூரை விட்டுப்போக எனக்கு மனம் வரவில்லை. மேலும் என் நிலைமையை நீ அறிந்தால் அவசரப்பட்டு நீ நேற்று செய்துவிட்ட காரியத்துக்காக வருந்துவா யல்லவா என்றும் நினைத்தேன். உண்மையில் என் நிலைமை தெரியாமல் நான் திண்டாடிய போது என்னைக் காதலித்த நீ, நேற்று என் உடையையும் கவனியாது என்னையே மணந்து கொள்வதாகச் சொல்லி யிருந்தால் இன்று நம்முடைய நிலைமை எவ்வளவோ இன்பகாமானதாய் இருந்திருக்குமே? என்ன செய்வது? எல்லாம் கடவுள் இஷ்டப்படி நடக்கிறது. இனிமேல் நான் உன்னுடன் பேச வேண்டியது ஒன்றுமில்லை. எல்லாரும் கூடியிருக்கிற அறைக்குப் போகலாம் வா' என்றான்.

அப்போது ராஜேஸ்வரி தன் ஆசைக் காதலனுகிய மோகனசுந்தரத்தைப் பிடித்துக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தவண்ணம், 'இல்லை, இல்லை. இதற்குள் போய்விடக் கூடாது. நீ சொல்லவேண்டியதை யெல்லாம் சொல்லிவிட்டாய். அதற்குப்பதிலாக நான் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. நான் நேற்று உனக்கு அளித்தபதில் உன்னைத் திடுக்கிடச் செய்திருக்கலாம். ஆனுல் அப்போதும் நான் உன்னுடன் அன்பாகவும் பரிந்தும் ஆவலுடனும் பேசவில்லையா? உனக்காக நான் எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பதாகச் சொல்லவில்லையா? ஆனுல் நான் தரித்திரத்துக்கு மிகவும் பயந்தேன் தரித்திரம் என்ருல் எனக்குமட்டுமல்ல, உனக்கும் கஷ்டம் தானே. செல்வத்துக்காகவே நான் வேறு ஒருவனை மணப்பதாகவும், என் மனம்மட்டும் எம்பேர்தும் உன்னிடமே இருக்குமாதலால் உன்னையே, கலியாணத்துக்குப் பின்னரும் காதலனுக ஏற்றுக்கொள்வேன் என்று கூறவில்லையா? அது எனக்கு உன்னிடத்திலுள்ள அளவுகடந்த அன்பையேயன்ரு காண்பிக்கிறது. ஒருவனை விவாகம் செய்துகொண்டு நல்ல அந்தஸ்திலிருக்கும்போதும் உன்னை மறவாமல் உன் இன்பத்தை அனுபவிக்க முன் வருவதென்ருல் அதற்கு என் அன்பு தானே காரணம். அதை ஒரு கெட்டதொழில் என நீ கூறலாம். ஆயினும் நம்மிடையே அப்படிப்பட்ட வேதாந்தத்தை யெல்லாம் பேசிக்கொண்டிருக்கலாகாது. உன்னை அவ்வளவு அதிகமாக நேசிக்கும் என் விஷயத்தில் நீ எவ்வித தப்பான அபிப்பிராயமும் கொள்ளலாகாது' என்ருள் அவள் அவ்வாறு பேசியபோது மிக்க பரிதாபமான குரலில் அதிகம் கெஞ்சிக்கேட்பவள் போன்ற தோரணையில் பேசினுள். அவளுடைய நிலைமையைக்கண்ட மோகனசுந்தரம் மீண்டும் ஒன்

றும் தோன்றாமல் என்ன செய்வதென்னும் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடினான். அவள் தழுவுதலினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளவில்லையென்றாலும் ஏதோ திண்டாடுகிறவன் பார்ப்பதுபோல் ஒருவிதமான பார்வையால் பூமியை நோக்கிப்பார்த்தான்.

இதையெல்லாம் கண்ட ராஜேஸ்வரி, இப்போது மோகனம் தனக்கு ஈடுபடுவதென்றால் தியாகராஜனையும் துறந்து விடுவதென்னும் நிச்சயத்துடன், 'மோகனம்' நேற்று நாம் இருவரும் சந்தித்ததையே உன்னால் மறந்துவிடமுடியாதா? அதை உன் ஞாபகத்திலிருந்தே அடியோடு ஒழித்து விடுவாயானால் எவ்வளவோ திருப்திகரமாயிருக்கும் அதை மறந்துவிட்டதாக நினைத்து இன்று மறுபடியும் உன்னைக்கலியாணம் செய்துகொள்ள எனக்கு இஷ்டமா? என்றுகேள். அதற்கு எவ்வளவு சந்தோஷத்துடனும் ஆனந்தமாகவும் ஒப்புக்கொள்கிறேன் பார். ஆதலால் காதல, நேற்றையசங்கதியை மறந்துவிடு அதனாலேயே என்னைப்பற்றி ஒருவித முடிவுக்கு வந்துவிடவேண்டாம் நீ என்னை இன்னமும் நேசிப்பது உண்மையாயின், என்னை விவாகம் செய்துகொண்டு என்னுடன் வாழ்ந்தால் இன்பவாழ்க்கையை அனுபவிக்கலாமென நினைத்தால் நான் உன்னைக் கணவனாக ஏற்றுக்கொள்வதில் எவ்வளவு திருப்தியுடையவளாக இருப்பேன் தெரியுமா? என்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி கேட்க எனக்கு உரிமை உண்டு என்பதுமட்டும் உன் ஞாபகத்தில் இருக்கட்டும் கடவுள் முன்னிலையில் நான் உனக்கு மனைவியாய்விட்டதை மறுக்க உன்னால்முடியுமா?' என்று பரிவுடன் கேட்பவர் மனம் இளகும்படி பேசினாள். பாவம் மோகனம் பணிந்துவிட்டான். குழப்பமெல்லாம் போய்த் தெளிவு ஏற்பட்டுவிட்டது அவளுடைய வேண்டுகோள் அதிலும் கடைசி சொற்கள்

அவன் மனதில் ஆழப்பாய்ந்து அவள் விஷயத்தில் தாராளமாகவே நடந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தைத் தூண்டியது அநுபவமும் பொறுமையும் இல்லாத அவன், அவளை முன்னரும் கெடுத்தது அவனல்ல என்பதையும், அவளே தூண்டி அவனைக் கெடுத்தாள் என்பதையும் இதர சந்தர்ப்பங்களையும் அவன் சிந்திக்கவேயில்லை முன்பு சம்பந்தம் ஏற்பட்டுவிட்டபடியால் அவளை விவாகம் செய்து கொள்ள அவன் கடமைப்பட்டிருப்பதாக நினைத்தான். அவளுடைய வேண்டுகோள் செவியுற்றதும் அவனுடைய மனோநிலை மாறியது. அவன் மனமாறுதலையும் ராஜேஸ்வரி கண்டு கொண்டாள். தனக்கு ஏற்பட்டுவரும் வெற்றியையறிந்து புளகாங்கிதமடைந்தாள் தியாகராஜனுக்கு மோகனத்துக்குக் கிடைக்கப்போவதைவிட எவ்வளவோ மடங்கு அதிகமான ஆஸ்தி இருக்கிறதென்றாலும், பிரபுவின் பிள்ளையாகவுள்ள மோகனத்தையே விவாகம் செய்துகொள்வதெனத் தீர்மானித்தாள்.

அப்போது மோகனமும் தன் தாய் தந்தையையும் மறந்தான் இதரசந்தர்ப்பங்களும் மறந்துபோயின. அவளுடைய அன்பில் அப்படியே மூழ்கிவிட்டான் அவள் அழகில் ஈடுபட்டான். அவளைச் சுற்றியிருந்த அவன் கை சிறிது அசைந்தது அவளை அப்படியே தன் மார்புறத் தழுவிக் கொண்டு அவளிஷ்டப்படியே அவளைக் கலியாணம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டு விடலாமா என்றும் நினைத்தான். அவ்வேளையில் யாரோ அவ்விடம் வரும் காலடிச் சத்தம் கேட்டது. உடனே இருவருக்கும் தங்கள் நிலைமை ஞாபகத்துக்கு வரவே, இதுவரை எத்தகைய காமவிகாரமும், மனோ எழுச்சியும் அடையாதவர்களைப்போல் தங்கள் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு ராஜேஸ்வரி மோகனத்தினிடம், 'ஐயா

அந்தக்கொடிகள் எவ்வளவு பசுமையாக இருக்கின்றன பார்' என்று கூறினாள். அச்சமயத்தில் தியாகராஜனும் அங்கே வந்து சேர்ந்தான் ஒருகால் அவன் மறைவாக இருந்து அவர்கள் இருவரும் பேசியதையெல்லாம் கேட்டுவிட்டானோ என்று பயந்தார்கள். ஆனால் அவன் தன் வழக்கப்படி கபட மற்ற முறையில், 'ஓ நீங்கள் நல்ல தனிமையான இடத்தைத் தேடிக்கொண்டீர்கள் இதில் எனக்கு ஒன்றும் ஆச்சர்யமில்லை அங்கெல்லாம் பெருங்கூட்டமாக இருககிறது' என்று கேட்டதும் அவர்களுடைய சந்தேகம் ஒழிந்துவிட்டது. உடனே ராஜேஸ்வரியும், 'எனக்கு ஜனக்கூட்டத்தின் உஷ்ணம் தாங்க முடியாமல் மிகக்கஷ்டமாய் இருந்தது ஆகவே இந்தத் தனியறைக்கு அழைத்துவரும்படி நானே உன் நண்பன் மோகனசுந்தரத்தைக் கேட்டுக்கொண்டேன் அப்போது நான் மூர்ச்சையடையவள்போலும் கஷ்டப்பட்டேன் என்றதும் அவன், 'ஆஹா அப்படியா இப்போது உன் உடம்பு எப்படி இருக்கிறது உனக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டதென்பதைக் கேட்கவும்என்மனம் சகிக்கமாட்டேன் என்கிறது' என்றான்.

பிறகு அவள் தியாகராஜன் கையைப் பிடித்துக்கொண்டு நாம் இவரும் மறுபடியும் ஜனங்கள் நிரம்பியிருக்கும் ஹாலுக்குப் போவோம் வா! என்று கூறிக்கொண்டே மோகனத்தைப்பார்த்து, 'ஐயா, மூன்றும்முறை நடனம் நடிக்கப்படும்போது நாம் இருவரும் நடிக்கவேண்டுமென்று சொற்பநேரத்துக்குமுன் தீர்மானித்ததை நான் மறந்துவிடவில்லை' என்று ஒருவித பார்வையை வீசிக்கொண்டே கூறினாள். அப்போது தியாகராஜனும், 'மோகனம்! நீயும் எங்களுடன் வா. நீ இந்த இடத்துக்குப் புதிதாகையால் உன்னைத் தனியாக விடுவது எங்களுக்கு அழகல்ல' என்றான். மோகனமும் அவர்கள் பின்னாலேயே போனான். என்றாலும் அவனது மனம் மீண்

டும் குழப்பத்தை யடைந்துவிட்டது. தன்னிடம் அவ்வளவு அன்புடன் பேசிய அவள் உடனே மற்றொரு ஆடவனுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு அவ்வளவு திருப்தியுடன் நடக்கிறாளே என்று நினைத்து வருத்தமடைந்தான். அவர்கள் இருவருக்குள் எந்தவிதமான அன்னியோன்யம் இருக்கிறதென்பது அவனுக்குத் தெரியவில்லை. எனினும் சொற்ப நேரத்துக்குமுன் அவனும் ராஜேஸ்வரியும் பேசியதைத் தியாகராஜன் கேட்கவில்லையென்பதை மட்டும் நிச்சயமாக அறிந்தான். அவ்வாறே ராஜேஸ்வரியும் தியாகராஜன் எதையும் கேட்கவில்லையென்பதை நிச்சயமாக அறிந்து சந்தோஷப்பட்டு அவனுடன் குசாலாகப் பேசிக்கொண்டே போனதுடன் ஒரே வேட்டையில் இந்த இரு ஆடவர்களில் யாரேனும் ஒருவனைப் பெறுவதென்னும் முடிவுடன் இருவருக்கும் திருப்தியாக நடந்துகொண்டு வந்தாள். எல்லாரும் கூடியிருந்த அறைக்கு அவர்கள் சென்றதும் ஹேமவதி உட்கார்ந்திருந்த சோபாவில் தியாகராஜன் ராஜேஸ்வரியுடன் உட்கார்ந்தான். ரங்கநாதம் பிரபு மோகனசுந்தரத்தை அழைத்துக்கொண்டு சிற்றுண்டியறைக்குச் சென்றார். தன்னுடைய பழைய நண்பனது குமாரனை அவனுக்கு எல்லா வகை உதவிகளும் செய்யவேண்டுமென்பது அவருடைய எண்ணம்.

சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வந்தபின்னர் ரங்கநாதம் பிரபு அவனை வேறொரு அழகிய பெண்ணினிடம் அறிமுகம் செய்துவைத்து அவளுடன் இரண்டாவது முறை நடனம் செய்யும்படி கூறினார். அவனும் அவ்வாறே செய்தான். சொற்ப நேரத்துக்குப் பின்னர் மூன்றாவது முறை நடன வேளை சமீபித்தபோது மோகனத்துக்கு ராஜேஸ்வரி கூறிய சொல் ஞாபகத்துக்கு வந்தது. அவளுடன் நடிப்பதா இல்

லேயா என்று யோசித்தான். இப்போது அவன் தனியே இருந்ததால் அவ்விஷயத்தைப் பற்றித் தீரயோசிக்க அவன் மனோநிலைமை சரியாக இருந்தது. அவன் தந்தை கூறிய ஆலோசனை மீண்டும் அவனது ஞாபகத்துக்கு வந்தது. எனினும் ராஜேஸ்வரியை அடியோடு திரஸ்கரித்துவிட அவனுக்கு மனம் துணியவில்லை. ஆகவே அவன் ராஜேஸ்வரியின் குறிப்பின்படியே அவளுடன் நடனம் செய்வதென்று தீர்மானித்து அவள் உட்கார்ந்திருக்கும் சோபாவின் அருகில் வந்தான். இதற்குள் தியாகராஜன் சிற்றுண்டியறைக்குப் போய் விட்டிருந்தான். ஆகவே மோகனம் வந்ததும் ராஜேஸ்வரியும் தாயினிடம் கூறிவிட்டு அவனுடன் நடன அறைக்குச் சென்றாள். அங்கு சென்று பார்த்ததில் வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த ஜனங்களில் தியாகராஜனும் ஒருவனாக நின்றிருந்ததால் ராஜேஸ்வரி மோகனத்தினிடம் மெதுவாக, 'நடனம் முடிந்த பின்னர் நாம் இருவரும் தனியாகச் சில விஷயங்களைப் பேச சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் இப்போது ஜாக்கிரதையாக நடனம்செய்' என்று எச்சரிக்கை செய்தாள். மோகனத்துக்கு அவளுடைய எச்சரிக்கையும் அநாவசியமாகவே இருந்தது. அவன் அவளுடன் நடிக்கும் போது அவளுடைய குறிப்புகளுக்கெல்லாம் ஈடுபடாமல் அவளை அலட்சியம் செய்பவன்போன்ற முறையில் நடிப்பதென்றே அவன் முடிவு செய்திருந்தான். ஆகவே அவர்கள் இருவரும் நடிக்கும்போதும் அதிக பழக்கமில்லாத இருவர் நடிப்பதுபோல தளுக்காக நடித்தார்களேயொழிய சரசசல்லாபங்கள் எதிலும் ஈடுபடவில்லை. நடனம் முடியும் சமயத்திலும் தியாகராஜன் அங்கேயே இருந்ததால் அவனுக்கு ஏதேனும்சந்தேகம் உதிக்கும்படி மோகனத்துடன் இரண்டாவது

முறையாகத் தனியறைக்குச் செல்ல அவளுக்குத் தைரியம் வராததால் அவள் எப்படியோ கூட்டத்தின் சத்தத்தில் மோகனத்தின் காதில் மட்டும் விழும்படி, 'அன்பா! தனியாகச் சந்திக்க இப்போது சந்தர்ப்பம் ஏற்படாவிட்டாலும் நாளைய பகல் ஒரு மணிக்கு என்னை என்வீட்டுத் தோட்டத்தில் அன்று கண்ட இடத்தில் சந்திக்கத் தவற வேண்டாம்' என்று கூறிவிட்டாள்.

மோகனம் அதற்கு எத்தகைய பதிலும் கூறவில்லை பதில்கூற விரும்பியிருந்தாலும் முடிந்திராதபடி அவர்கள் ஹேமவதி உட்கார்ந்திருந்த சோபாவுக்கு அருகில் வந்துவிட்டனர். ஆகவே மோகனமும் ஒன்றும் கூறாமல் எல்லாருக்கும் மரியாதையாக வணக்கம் செலுத்திவிட்டு அவ்வறையின் வேறொரு மூலைக்குச் சென்றான். அங்கு அவனை ரங்கநாதம் பிரபு சந்தித்தார். வேறு சிலரும் கூடினர். தியாகராஜனும் வந்தான். எல்லாருமாகப் பல பொது விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர். மோகனம் இனி யாருடனும் நடிக்க முடியாதெனச் சொல்லிவிட்டு இராச் சாப்பாட்டுக்குக் கூப்பிடும் வரை தன் நண்பன் தியாகராஜனுடன் பேசிக்கொண்டிருப்பதென முடிவு செய்தான். இராச் சாப்பாட்டுக்குக் கூப்பிட்டபோது தியாகராஜன் ராஜேஸ்வரியை அழைத்துச் சென்றான். ரங்கநாதம் பிரபுவும் மோகனத்துக்கு வேறொரு பெண்ணை அவளுடன் கூடிச் சாப்பிடும்படி கூறினார். எல்லாருமாகச் சேர்ந்து உட்கார்ந்து இராச்சாப்பாட்டை அருந்தினார்கள். அந்த ஆகாரம் மிக்க புஷ்டியானதாகவும் விலையுயர்ந்ததாகவும் இருந்ததென்று சொல்லவேண்டிய அவசியமே இல்லை. அத்தகைய பிரபுக்களால் நடத்தப்படும் விருந்துகள் பெருமைக்காகவேனும் விலையுயர்ந்ததாகவே இருக்கும். சாப்

பாடு முடிந்தபின்னர் அவரவரும் தங்கள் இருப்பிடத்துக்குப் புறப்பட்டார்கள். தியாகராஜனும் மோகனசுந்தரமும் ஒன்ருகப் புறப்பட்டுத் தியாகராஜன் மாளிகைக்குச் சென்றனர். மோகனத்துடன் தனியாக ஒருவார்த்தையும் இறுதியில் பேச முடியவில்லையே என்னும் சிந்தனையுடன் ராஜேஸ்வரி தன் தாயினுடன் புறப்பட்டாள். மோகனம் புறப்படும்போது வீட்டுக்காரனுன ரங்கநாதம் பிரபு, தியாகராஜனிடம், 'நீயும் நமது நண்பனுன மோகனமும் நாளேயதினம் சாப்பாட்டுக்கு வரவேண்டு மென்பது ஞாபகத்தில் இருக்கட்டும் என்று கூறினர்.

மோகனம் தியாகராஜனுடைய மாளிகைக்குப் போய்ச் சேர்ந்ததும் படுத்துக்கொண்டதில் மறுநாள் காலே அதிகநேரம் வரை தூங்கிவிட்டான். ஏனெனில் விருந்து நடந்த இடத்தில் அவன் பலவிதமான மனே தேக அயர்ச்சிகளே யெல்லாம் அடைந்திருந்தான். காலே பதினெரு மணிக்குமேல் அவன் காலே ஆகாரத்துக்காக மாடியிலிருந்து இறங்கி வந்தான். இதற்குள் தியாகராஜன் காலேயில் எழுந்து குதிரைமீது ஏறி அதிக தூரம்வரை சவாரி செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான். ஆகவே, இருவருமாகச் சேர்ந்து காலே சிற்றுண்டியை அருந்தினர். அப்போது தியாகராஜன், 'நாம் இன்று மாலே ரங்கநாதம் பிரபுவின் வீட்டில் விருந்து சாப்பிட வேண்டும். ஆதலால், நீ உன் தந்தைக்குக் கடிதம் எழுதி இரண்டொரு நாள் கழித்து இரத்தினபுரிக்கு வருவதாகத் தெரிவித்துவிடுவது நலமல்லவா,' என்று கூறினன். அதற்கு மோகனம், 'நான் இன்றையதினமே இரத்தின புரிக்குப் புறப்பட்டுவிட்டிருப்பேன். ஆனல் ரங்கநாதம் பிரபுவின் அழைப்பிற்கு இணங்காமற் போவது சரியல்ல என்று கருதியே நின்றேன்' என்றதும், தியாகராஜன் சிரித்துக்கொண்டே வேடிக்கை

யாக, 'ஓ, நீ இன்று திரும்பிவிட்டிருப்பாயோ? மிதுனபுரியி லுள்ள நீ பிரஸ்தாபித்த அந்த மாதைப் பார்க்காமலா போய் விடுவாய்' என்று கேட்டான். முதலில் மோகனம் சிறிது வெட்கமடைந்து உடனே பதில் கூறவில்லையென்றாலும் சொற்பநேரம் சிந்தனைக்குப் பின்னர், 'நீ ஏன் அவ்வாறு நான் அவளைக் காண விரும்புவேன் என்று நினைக்கிறாய்' என்று அலட்சியமான தோரணையில் கேட்டான். அதற்கு மோகனம், 'அதுதானே இயற்கை. ஆடவர்களெல்லாம் அப்படித் தான் செய்வர். அதற்குத்தான் பலஹீனமென்று பெயர். மேலும் நீ மிக்க யௌவனனாகவும், அனுபவ மற்றவனாகவும் இருக்கிறாய். ஆதலால் அப்படிச் செய்வாய் என்று நான் நினைத்ததில் ஆச்சர்யமொன்றுமில்லை, என்று விடையளித் தான். அதற்கு மோகனம், 'எப்படியாயினும் சரியே இனி நான் அம்மாதின் முகத்தையும் பார்ப்பதில்லை என்று தீர்மா னித்து விட்டேன்' என்று மிக்க மனோ உறுதியுடன் கூறு பவன்போல தெரிவித்தான்.

அப்போது தியாகராஜனும், 'நீ மிக்க புத்திசாலித் தனத் துடனும், நிதானமாகவும் நடந்துகொள்வதை நான் பாராட்டு கிறேன். எனது அன்பனே! நான் கூறும் யோசனையைச் சிறிது கவனமாகக் கேள். அப் பெண்ணை அடியோடு மறந்து விடு. நீ கூறிய அவ் விஷயத்தில் நான் அதிக கவனம் செலுத் திச் சிந்தித்துப் பார்த்தேன். உன் விஷயத்தில் எனக்கு அதிக சிரத்தை உண்டு. அப்படிப்பட்ட ஒரு கெட்ட எண்ணமுடைய பெண்ணின் வலையில் நீ சிக்கியதற்காக நான் உண்மையில் வருத்தப்படுகிறேன். எனக்குப் பெண்களைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. ஆனால் நீ அப் பெண்ணைப்பற்றிக் கூறிய வரையில் அவள் எல்லாவிதமான பாப காரியங்களையும் செய் யத் தயாராக இருப்பாள் என்பது மட்டும் நிச்சயம். ஆதலால்

இனியும் நீ அவளைப் பார்ப்பதில்லையென்று உறுதி கூறினல் என் மனம் ஒருவாறு திருப்தியடையும்' என்று கூறினன். அதற்கு மோகனசுந்தரம், என தன்புள்ள தியாகராஜா, என் விஷயத்தில் நீ இவ்வளவுசிரத்தை எடுத்துக் கொண்டதற்காக உனக்கு நன்றிசெலுத்துகிறேன். நீ கூறுகிறபடி நான் உறுதி மொழி கொடுக்கவில்லையென்றல் உன்னைப்போன்ற உயரிய குணதிசயமுடைய ஒரு நண்பனைப் பெற்றும் பிரயோசன மில்லாதவனுகிறேன். ஆகவே, நான் உன் இஷ்டப்படியே உறுதிமொழி அளிக்கிறேன்' என்றான். அதனல் அதிக சந்தோஷமடைந்த தியாகராஜன் அவனது கையைக் குலுக்கி விட்டு, 'நண்பா! நீ இவ்வாறு உறுதிமொழி யளிக்காமல் அப் பெண்ணின் கண்ணில் மீண்டும் தென்படுவாயாயின் அப்படிப்பட்ட ஒருவனை நான் மறுபடியும் என் மாளிகையில் வைத்துக் கொள்வதும் மிகத் தவறாகும். மேலும் உடனே இரத்தினபுரிக்குப் போய் விடும்படி உனக்கு யோசனை கூறுவதும் எனது கடமையாக இருக்கும். ஆனல் இப்போது நீ உறுதி மொழி அளித்து விட்டதால் எனக்குத் திருப்தி ஏற்பட்டு விட்டது. இதற்கிடையில் நேற்று ரங்கநாதம் பிரபு என்னிடம் தனியாகப் பேசியபோது உன் தந்தை அவருக்கு ஒரு கடிதம் எழுதி யிருப்பதாகவும், அவர் ரங்கநாதம் பிரபுவுக்குப் பாலிய சினேகிதரென்றும் தெரிவித்தார். ஆனல் மற்ற விவரங்களைத் தெரிவிக்கவில்லை. அதை நீயும் இப்போது கூற வேண்டாம். நீ இரத்தின புரிக்குச் சென்று உன் பெற்றோர்களிடம் என் சினேகிதத்தைப் பற்றித் தெரிவித்த பின்னர் அவர்கள் அனுமதி பெற்று நீ அந்த இரகசியத்தை யெல்லாம் எனக்குத் தெரியப் படுத்தலாம். இன்று நாம் எவ்வாறு வேடிக்கையாகக் காலங் கழிப்போம் என்பதை இப்போது யோசிப்போம்' என்றான்.

அதற்கு மோகன சுந்தரம், 'அன்புள்ள தியாகராஜா! நேற்றே நீ எனக்காக உன்னை மணந்து கொள்ளப் போகும் பெண்மணியையும் பார்க்கப் போகவில்லை. நேற்று விருந்து மண்டபத்திலும் நீ அப் பெண்மணியைச் சந்தித்ததாக எனக்குத் தெரியவில்லையே' என்றான். உடனே தியாகராஜன், 'நீ இவ்வளவுதானா, நான் நேற்று விருந்தில் எவரிடமும் அதிகமான கவனம் செலுத்தியதை நீ கவனிக்கவில்லையா' என்று கேட்க, மோகன சுந்தரம், 'நான் பிறருடைய விஷயத்தை அவ்வளவு அதிகமாகக் கூர்ந்து கவனிக்கும் வழக்கமில்லை. ஆதலால் நீ யாரை அதிகம் கவனித்தாய் என்பதை நான் பார்க்கவில்லை. நேற்று நீ, உனக்கு மனைவியாகப் போகிற பெண்ணை பார்க்கவில்லையென்றே வைத்துக் கொண்டால் இன்றும் நீ அவளைப் பார்க்காதபடி தடுக்கக்கூடிய அவ்வளவு சுயநலக்காரன் நான் அல்ல. ஆதலால் இன்று நீ அவ்விடத்துக்குப் போ. நான் உன்னுடைய விசாலமான தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கிறேன்' என்றான். அதற்குத் தியாகராஜன் சிரித்துக்கொண்டே, 'எனது அன்புள்ள நேசா! அது முடியாது. உன்னை நான் தனியே விட்டுவிடமாட்டேன். நான் அவன் வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதி அதில் நான் இன்று வாமுடியாதெனத் தெரிவித்து விட்டேன். ஆகவே நான் உன்னுடனேயே இருப்பேன். நாம் எங்கேனும் சவாரி செய்யலாம்' என்றான். அதற்குமேல் ஒன்றும் பேச மோகனத்தால் முடியவில்லை. ஆகவே தியாகராஜனுடைய இஷ்டப்படியே நடப்பதென அவனும் முடிவு செய்தான். ஆகவே அவர்கள் இருவரும் தனித்தனியே குதிரைமீது ஏறிக்கொண்டு அதற்கு முன்னாள் சவாரி செய்ததுபோலவே சவாரி செய்தார்கள் பகல் நான்கு மணிக்குமேல் மாளிகைக்குத் திரும்பி வந்து வேறு ஆடைகளை அணிந்துகொண்டு ஐந்துமணி சுமாருக்கு பாக்கியம் தம்பதிகள் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு

அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே விருந்தினர்களாக இருந்தார்கள். பாக்கியம் தம்பதிகள் தியாகராஜனையும் மோகனசுந்தரத்தையும் அன்புடன் வரவேற்றார்கள்.

இரவு ஆகாரத்துக்கு முன்பு பற்பலரும் பலவிதமான ஆடல்பாடல்களில் கவனத்தைச் செலுத்தினர், அப்படிப் பட்ட சமயத்தில் ரங்கநாதம் பிரபு மோகனத்தைப் புஸ்தக சாலையுள்ள அறையில் தனிமையாக அழைத்துச்சென்று உட்கார வைத்துக்கொண்டு, 'அப்பா! நான் உனக்கு எவ்வகையிலேனும் உதவி செய்யவேண்டுமா? உன் தந்தை எனக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தாய் அல்லவா? ஆதலால் இப்போதும் நீ உன் தந்தையினிடம் பேசுவது போலவே நினைத்து என்னிடம் பேசவேண்டும். எப்படிப்பட்ட விஷயமாயினும் எவ்வித சங்கோசமுமின்றி என்னிடம் சொல்லலாம்' என்று கேட்டார். அதன்மீது அவன், அப்பெரியாரிடம் அதிக மதிப்புவைத்து, கேவலம் தியாகராஜனிடம் சொன்ன விஷயங்களை அவரிடம் சொல்லாமல் இருப்பது தவறேயாகுமென்றெண்ணி எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான். அவரிடமும் ராஜேஸ்வரியின் பெயரைச் சொல்லாமல் அப்பெண் மிதுனபுரியில் இருப்பதாகவே குறிப்பிட்டான். அவரும் பேச்சு மத்தியில் குறுக்கிடாமல் அவன் சொல்வதை மிக்க கவனத்தோடு கேட்டுவந்தார். அவன் முழுதையும் கூறி முடித்த பின்னர் அவர் சிறிதுநேரம் அதைப்பற்றிச் சிந்தித்தார்.

பிறகு அவர் அவனிடம் பெற்றோர் பேசுவது போன்ற முறையில், 'உன் தந்தையைவிட மூத்தவனை என் சொல்லைக் கவனமாகக்கேட்பாய் என்று நம்புகிறேன். அப்பெண்ணை அடியோடு பகிஷ்கரித்து விடு. நீ வயதில் இளையவன். கேவ

லம் அப்படிப்பட்ட பெண்ணுக்காக நீ உன் வாழ்க்கையைத் தியாகம் செய்துவிட முடியாது. அவள் பெரிய விபசாரியே என்பதில் ஆட்சேபமில்லை. இப்போது நான் உனக்குச் சரியான புத்திமதி கூறவில்லையா?" என்றார். உடனே மோகனம் அவரது கையைப் பிடித்துக்கொண்டு, 'ஆம், ஐயா தாங்கள் நல்ல புத்திமதியையே கூறினீர்கள். நான் இனி அவளுடன் எத்தகைய சம்பந்தமும் வைத்துக் கொள்ளமாட்டேன். எனத்தியாகராஜனிடம் வாக்குக் கொடுத்திருக்கிறேன். அதே வாக்குறுதியையே இப்போதும் உமக்கு அளிக்கிறேன். என்று கூறினன். அதற்கு அவர், 'அப்பா! அவ்வாறு உறுதி கூறியதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆயினும் நீ இன்னும் சில காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அவள் உன்னைச் சும்மா விட்டுவிட மாட்டாள் எப்படியாவது உன்னை மீண்டும் சந்தித்துப் பேசி உன்னைமயக்கி அவள் வலையில் போட்டுக்கொண்டு உன் வாழ்வைப் பாழ்படுத்திவிடுவாள் ஆதலால் நீ அவளைக் குழப்பத்தில் விட்டுவிடுவதற்காகச் சில வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது' என்றார். உடனே அவன் ஆர்வத்துடன், ,ஐயா நான் இப்போது என்ன செய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்கள்' என்று கேட்டான் அதற்கு அவர், 'அப்பா; நீ அப்பெண்ணுக்கு ஒருகடிதம் எழுதி அதில் நீ அவளுடைய புத்தியை நன்ருக அறிந்து கொண்டு விட்டதாகவும், வேருெரு உத்தமனை மணந்து கொண்டு அவனையும் ஏமாற்றி, விவாக வாழ்க்கையென்னும் பரிசுத்த வாழ்க்கையையும் அபரிசுத்தமாக்கிக் கள்ளக் காதலனுடன் இன்பமனுபவிக்க முயலும் அவளை நீ மனமார வெறுப்பதாகவும் குறிப்பிட்டு அக்கடிதத்தை என்னிடம் கொடுத்துவிடு. அதை நான் அவளுக்குச் சேர்ப்பித்துவிட ஏற்பாடுசெய்கிறேன் உன் தந்தைபோன்ற முறையில் நான் இதைக்கூறி இருப்பதால் எப்படிப்பட்ட தடையும் கூருமல்

இப்படியேசெய்' என்ருர். இதைக்கேட்ட மோகனம் திடுக்கிட்டுப்போய் அவாதுமுகத்தை உற்றுநோக்கினன் அப்பெண் யார் என்பது அவருக்கு எப்படித்தெரியும். அதற்கு முன்நாள் விருந்தில் தன்னுடைய நடத்தையால் குறிப்பாக எதையேனும் தெரிந்துகொண்டு விட்டாரோ அல்லது அவள் யார் அவளது விலாசமென்ன என்று இப்போது கேட்கப் போகிருரோ எனப்பலவிதமாக சிந்தித்தான்.

அப்போது ரங்கநாதப்பிரபு, 'மோகனம்' நீ என்ன யோசிக்கிருய் என்பதை அறிந்துகொண்டுவிட்டேன் உன்னைத் தன்வலையில் சிக்க வைத்துக்கொண்டு தனது காமத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்பும் பெண் ஹேமவதிசீமாட்டியின் குமாரி ராஜேஸ்வரியே என்பது எனக்குத்தெரியும் அவள் மிக்க கேவலமான குணத்தையுடையவள்' என்று கூறினர். மோகனம் உடனே எத்தகைய பதிலையும் கூறவில்லை. ஆனல் அவர் துணிவுடன் கூறிய அதை மறுக்கவும் அவனல் முடியவில்லை எனினும் தன் இரகசியத்தை அவர் சரியாக அறிந்துகொண்டு விட்டார் என்று கூறவும் மனந்துணியவில்லை இவ்வாருக அவன் வருந்திக்கொண்டிருந்ததை அறிந்த அப்பெரியார், 'வாலிபனே! எனக்கு அச்சங்கதி எவ்வாறு தெரிந்திருந்தால் தானென்ன? நீயும் அறியாதபடி நான் உண்மையை அறிந்துகொண்டுவிட்டேன் ஆனல் இதையே அதிகநேரம் பேசுவதென்ருல் மனதுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆதலால் என் சொற்படி கேட்டு நான் கூறியபடி கடிதம் எழுதி என்னிடம் கொடுத்துவிடு பிறகு நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறினர். அவர் உண்மையிலேயே தன் தந்தை பேசுவதுபோன்ற அதிகார தோரணையிலும், அன்புடனும் பேசுகிருர் என்பதை மோகனம் உணர்ந்து அவர் கட்டளைப்படி செய்யத் தாமதம் செய்யாமல் பேனவை

எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தான். ஒருவரி எழுதினன், அதற்குமேல் எழுதமுடியவில்லை. மனம் குழப்பமடைந்தது. அவனுடைய மனோநிலைமையை அவனது முகக்குறிப்பாலேயே உணர்ந்த அவர், 'என்ன கஷ்டப்படுகிருய் நான் சொல்லிக்கொண்டே வருகிறேன், நீ எழுது என்று கண்டிப்பாகக் கூறிச்சொல்லவும் ஆரம்பித்தார். பாவம், மோகனமும் வேறு வழியின்றி எழுத ஆரம்பித்தான். ஐந்தாறுவரிகள் எழுதிய பின்னர் மேற்கொண்டு எழுத அவனுக்கு மனமில்லை. ஆகவே அவன், 'ஐயா தாங்கள்சொல்வது அதிக தூரத்துக்கு இழுத்துக்கொண்டுபோய் விடுவதாக இல்லையா?' என்று கேட்டான் அதற்கு அவர், 'இவ்வாறு கண்டிப்பாக எழுதாமல் மரியாதையும் உபசாரமும் கூடிய வார்த்தைகளை உபயோகிக்க வேண்டுமென்கிருயோ? அவளுக்கு நாம் எவ்வளவு கண்டிப்பாக இருக்கிறோமென்பது தெரிந்தால்தான் உன்னை மறந்துவிடுவாள் இல்லாவிட்டால் எப்படியாவது உன்னை மயக்கி அழித்துவிடுவாள்' என்ருர்.

அப்போது மோகனம், 'ஐயா, ஒரு காலத்தில் என்னை அன்புடன் நேசித்த ஒருத்திக்கு இவ்வளவு கண்டிப்பாக எழுதுவது நியாயமாகுமா?' என்றதும் அவர், 'அன்பாவது, நேசமாவது; அப்பரிசுத்தமான பதங்களை அவள் விஷயத்தில் உபயோகித்து அவற்றின் யோக்கியதையைக் கெடுத்துவிட வேண்டாம்; ராஜேஸ்வரியின் காமவலையில் சிக்கி அறிவை இழக்க வேண்டாம். நீ அவ்வளவு கேவலமானவனென்று நான் கருதவில்லையே' என்று கூறவே அவன், 'சரி, நான் உங்களிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். உங்கள் இஷ்டப்படியே செய்கிறேன் என்ன எழுதவேண்டுமென்பதைச் சொல்லுங்கள்' என்று கேட்டான். அவரும் சொல்லிக் கொண்டே வந்தார். இரண்டொரு நிமிஷங்களில் கடிதமும்

எழுதியாயிற்று. அக்கடிதத்தைப் பெரியார் வாங்கிப் பெட்டியில் வைத்துப் பூட்டியபின்னர் அவர், 'சரி, இனி நாம் சாப்பாட்டு அறைக்குப் போகலாம் வா' என்றார். அப்போது அவ்வாலிபன், 'ஐயா, இன்னும் ஒரு வார்த்தை. இச் சங்கதிகளையெல்லாம் எனது நண்பனான தியாகராஜனுக்குச் சொல்வதா? அவனுக்கும் நீங்கள் அறிந்திருக்கும் எல்லாச் சங்கதிகளும் தெரியுமோ?' என்று கேட்டான். அதற்கு ரங்கநாதம் பிரபு, 'தியாகராஜன் இதைப்பற்றி இனி உன்னிடம் ஒன்றும் பேசமாட்டான் நீயும் ஒன்றும் பேசவேண்டியதில்லை. நீ நாளை காலை இரத்தினபுரிக்குப் புறப்படவேண்டும். உன் தந்தையின் நண்பன் என்னும் முறையிலும், உன் விஷயத்தில் சிரத்தை கொண்டவன் என்னும் முறையிலும் நீ இன்னும் அதிகமாக இங்கு தங்குவதை நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது' என்றார்.

186583

பிறகு ரங்கநாதம் பிரபுவும் மோகனமும் சாப்பாட்டு அறைக்குச் சென்றார்கள். அங்கே ஆகாரம் வைக்கப்பட்டிருந்தது. எல்லாருமாக உட்கார்ந்து ஏதோ பல விஷயங்களைப்பற்றி வேடிக்கையாகப் பேசிக்கொண்டே அதை அருந்தினர். இரவு பத்துமணி சுமாருக்கு மோகனமும் தியாகராஜனும் ரங்கநாதம் பிரபுவின் அனுமதி பெற்றுத் தியாகராஜன் மாளிகைக்குச் சென்றார்கள். மறுநாட் காலை மோகனமும், தனது நண்பனான தியாகராஜனுக்கு நன்றியறிதலான வணக்கம் தெரிவித்து விட்டும், அடிக்கடி கடிதம் எழுதுவதாகக் கூறிவிட்டும் இரத்தினபுரிக்குப் புறப்பட்டுச் சென்றான். இதற்கிடையில் ராஜேஸ்வரியின் நிலைமை என்ன என்பதைக் கவனிப்போம். மோகனசுந்தரம் சம்பந்தமாய் அவள் என்ன சிந்தித்துக்கொண்டிருந்தாள். என்பதையும் இனி விசாரிப்போம்.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆம் பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம்,7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம் பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாகாநந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
8-பாகமும் ...	16	2	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	ரத்தினாபாய் ...	1	18
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	10
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
கனகபூஷணம்2பாகம்...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	12
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.